
# இமயத்து உச்சியில்

ர் கா.பொ.இரத்தினம்



JPL
C7132

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமயத்து உச்சியில்

KOHA
JPL

பொதுசன நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

திருக்குறள் செல்வர், தமிழ்ச் சான்றோர்
பேராசிரியர் டாக்டர் கா. பொ. இரத்தினம்
(பாராளுமன்ற மு. நா. உறுப்பினர், இலங்கை)

7132CC

156838

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

காந்தளகம்

4, முதல் மாடி, ரகிசா கட்டடம்,
834, அண்ணா சாலை,
சென்னை - 600 002.

213, காங்கேயன்துறை வீதி,
யாழ்ப்பாணம்,

156838 CC.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேராசிரியர் டாக்டர் கா. பொ. இரத்தினம்**
எம். ஏ., பி. ஓ. எல். (சென்னை,)
பி. ஏ. ஆனர்சு (இலண்டன்,)
லிற்று. டி. (உ. ப. வ. அ.)

**இமயத்து உச்சியில்**
(கவிதைகள்)

உரிமை : **ஆசிரியருக்கு**

வெளியீடு : **காந்தளகம், சென்னை-2**

முதற் பதிப்பு : **கார்த்திகை, 1987**

**விலை : உரூபா 11-00**

*தி ஆ. 2018*

அவுத்திரேலியாவில் மக்கே மருத்துவமனையில் சிறப்பு அறுவை மருத்துவராகப் பணிபுரியும் என்னுடைய **மருமகன்** டாக்டர் சு. விக்கினராசா எவ். ஆர். சி. எசு., (இங்.) எவ். ஆர். சி. எசு. (கிளாசுக்கோ & எடின்) எவ். ஐ. சி. எசு., எவ். ஆர். ஏ. சி. எசு. அவர்களுக்கு இந்நூலை உரிமையாக்குகிறேன்.

அச்சிட்டோர்: சாலை அச்சகம், 11, திருவீதியான் தெரு, கோபாலபுரம், சென்னை-600 086 [69]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதனுள்...

KOHA
JPL

என்னுரை 1
அணிந்துரை—டாக்டர் வா. செ. கு. 3
நயப்புரை—பெருங்கவிக்கோ 7
எங்களுரை—டாக்டர் சாலையும்-சாலினியும் 9

1. இயற்கை

1.1 இமயத்து உச்சியில் 13
1.2 அந்தி மயக்கிடும் நேரத்தில்... 16

2. தமிழ்ப் போராட்டம்

2.1 தமிழைப் போற்றுக 17
2.2 தமிழரே உறங்காதீர் 20
2.3 இளைஞர்களே எழுங்கள் 21
2.4 ஆசிரியர்களே வாருங்கள் 23

3. தமிழர் போராட்டம்

3.1 முரசே கொட்டு 25
3.2 பறையே முழங்கு 27
3.3 களம்காண வம்மின் 29

4. வள்ளுவர் வான்மறை

4.1 திருவள்ளுவர் திருநாள் 30
4.2 தமிழ் மறையின் தனிமாண்பு 31
4.3 படித்துப் பயன் பெறுவீர் 32
4.4 அவனி காணா அருமருந்து 33
4.5 உலகத்து மக்களே வாரீர் 34
4.6 வெற்றிக்கு வழி 36

5. நூல்கள்

5.1 தொல்காப்பியம் 38
5.2 சங்க நூல்கள் 40
5.3 சிலப்பதிகாரம் 41

6. வாழ்வு தந்தோர்

6.1 வாழ்வு தந்த வள்ளல் 42
6,2 நாவலர்தாள் இறைஞ்சுதும் 44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.3 ஒருவர் உண்டோ 45
6.4 அருள் பரப்பும் கதிர் 47
6.5 பார் புகழ் திறலுக்குரியார் 48
6.6 தவப்புதல்வன் 49
6.7 தமிழ் மலை 52
6.8 காக்க வந்த தெய்வம் 55

7. பேரம்பலப் புலவர்

7.1 பதிகம் 60
7.2 கையறு நிலை 63

8. சீர்திருத்தம்

8.1 நஞ்சைப் பெருக்கின் நல்லமுதாகுமா 67
8.2 நீங்கள் யார் 69
8.3 மாபெருங் கொடுமை 71
8.4 தீமை விதைக்கலாமா 72
8.5 புன்னெறி போக்கி நன்னெறி நாட்டுக 74
8.6 பெரும் பேய் 76
8.7 ஒழித்தல் வேண்டும் 79
8.8 ஓங்கல் வேண்டும் 81

9. புது உலகம் 83

10. வெற்றி! வெற்றி! 94

11. பல்வகை

11.1 தமிழ்ப் பொழில் 96
11.2 குறிஞ்சி ஏடு 97
11.3 காரைக்குடி திருவள்ளுவர் கழகம் 98
11.4 மறைமலை அடிகளார் மன்றம் 98
11.5 கொழும்புத் தமிழ்ச் சங்கம் 99
11.6 சேலம்—குகை திருவள்ளுவர் கழகம் 99
11.7 மயிலை சீனி வேங்கடசாமிக்கு 100
11.8 சாலை இளந்திரையனுக்கு 100

குறிப்புரை 101


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

# என்னுரை

உணர்ச்சி மிகுந்து உள்ளம் குமுறும் போதும், மகிழும் போதும், கற்பனை விஞ்சிக் கவிதைகள் பிறக்கின்றன. மக்கள் உண்மையை உணர்ந்து. எழுச்சி பெற்று, தீமைகளையும் கொடுமைகளையும் நீக்கி, நல்லவற்றைப் போற்றி அழகியவுணர்வுடன் நாகரிகமாக வாழக் கவிதைகள் அவர்களை வழிப்படுத்துகின்றன. **மக்களிடையே உணர்ச்சியையும், அருட்சியையும, தெருட்சியையும, புரட்சியையும் முயற்சியையும் முடுக்கும ஆற்றல் செழுந்தமிழ்க் கவிதைகளின ஈடிணையற்ற சிறப்பாகும்.**

தமிழ் மொழியின் செழுமையையும், தூய்மையையும், பசுமையையும், பழமையையும், தமிழ் மக்கள் நன்கு உணராமையால் அதற்கு வாழ்வின் துறையனைத்திலும் - நாட்டிலும் வீட்டிலும் - கோயிலிலும் இசையிலும் - முதன்மை கொடுக்காமல் குருட்டாட்டம் ஆடியதையும், இலங்கையில் தமிழ் மொழிக்குப் பேரிடர் தோனறி அஃது அரியணையிலிருந்து இறக்கப்பட்டதையும், சுய நலக்கும்பல் பகுத்தறிவைக் கொன்று சமதர்ம சமவாழ்வைப் பாழாக்கியதையும், சமயத்தின் பெயரால் சாதி வேற்றுமை - தீண்டாமை பாராட்டிக் கண்மூடிப் பழக்கவழக்கங்களை நிலைநாட்ட வைதிகக் குடுக்கைகள் முயன்றதையும் பொறுக்க முடியாது நான் போராட்டக் களத்திற் குதித்தேன்; **இவர்கள் பலருடன் முட்டி மோதினேன்: எழுத்துப் போர், சொற்போர்களில் ஈடுபட்டேன்**; அரச அலுவலராகக் கடமையாற்றிக் கொண்டு அரசுடனும் மோதினேன்; அரசினால் பகிரங்க விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டேன்; அரச பணியை இடையில் விட்டேன்; அரசியற் பணியில் ஈடுபட்டேன்.

எல்லாந் தமிழ் இயக்கம், தமிழ்மறைக் கழகம், இலங்கை வானொலித் தமிழ்க்கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றம், கொழும்புத் தமிழ்ச் சங்கம் முதலிய வற்றின் துணையுடன் தமிழ் உணர்ச்சியை ஊட்டவும், தமிழை வாழ வைக்கவும், தமிழுக்கு எங்கும் எதிலும் முதன்மை கொடுக்கவும், தமிழ்ப் பண்பாட்டைப் பாதுகாக்தவும், தமிழ் நெறியை யும், சமவாழ்வையும் வலியுறுத்தவும், திருக் குறளே தமிழரின் மறை-தமிழ்மறை என்பதை நிலைநாட்டவும். பகுத்தறிவைப் பயன்படுத்தச் செய்யவும் யான் போராடினேன்.

இந்தப் போராட்டச் சூழ்நிலையிலும், இதனைத் தொடர்ந்து தமிழ் ஈழத்தில் நடை பெற்ற மறத் தமிழ் இளைஞரின் போராட்டம், மாபெரும் தமிழினப் படுகொலை முதலிய வற்றின் சூழ்நிலையிலும் பல கவிதைகள் பிறந்தன.

எனது பெயருடனும், **'கபிலர்', 'நக்கீரன்', 'மணிகிழார்', 'மேதாவியார்'. 'முனைவன்' முதலிய புனை பெயர்களுடனும் தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, பர்மா முதலிய நாடுகளின் ஏடுகளில் இக் கவிதைகளிற் பல வெளிவந்தன. இக் கவிதைகளை யும், வெளியிடப்படாத கவிதைகளையும் தொகுத்து வகைப்படுத்தி உருவாக்கப்பட்டது இமயத்து உச்சி யில் எனும் இந்நூல்.**

இந்நூலுக்கு அணிந்துரை நல்கிய துணை வேந்தர் டாக்டர் வா. செ. குழந்தைசாமி அவர் களுக்கும், இணைந்து 'எங்களுரை' நல்கிய டாக்டர் சாலை இளந்திரையன், டாக்டர் சாலினி இளந் திரையன் அவர்களுக்கும், நயப்புரை நல்கிய டாக்டர் பெருங்கவிக்கோ வ. மு. சேதுராமன் அவர்களுக்கும், நூலை அச்சிட்டு உதவிய சாலை அச்சகத்தாருக்கும், வெளியிட்ட காந்தளகத் தாருக்கும் என் நன்றி உரியது.

**கா. பொ. இரத்தினம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# அணிந்துரை

டாக்டர் வா. செ. குழந்தைசாமி,
துணைவேந்தர், அண்ணா பல்கலைக்கழகம்

கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் திரு. இரத்தினம் அவர்கள் சிறந்த தமிழ் அறிஞர். இலங்கை அரசியலில், உயர் மட்ட நிலையில் நீண்ட கால அநுபவம் உள்ளவர்; நாடாளுமன்ற உறுப்பினராகப் பதினெட்டு ஆண்டுகள் பணிபுரிந்தவர்; தமிழ் மொழிப் பற்றும் தமிழ் இன உணர்வும் நிறைந்தவர்; நிதானப் போக்கும், முதிர்ந்த பார்வையும் உள்ள அரசியல்வாதி; **அரை நூற்றாண்டுக்கும் மேலான தரம்மிக்க அரசியல் வாழ்வுக்கும, தமிழ் மொழி, தமிழ் இனத் தொண்டுக்கும், இலக்கியப் படைப்புகட்கும் சொந்தக் காரர்.**

அவரது நீண்ட சமுதாய, அரசியல் ஈடுபாட்டில் அவ்வப்பொழுது அவருக்கு ஏற்பட்ட உணர்வுகளின், ஆசைகளின் பிரதிபலிப்பாக எழுந்தவையே அவரது கவிதைகள். பாராட்ட வேண்டியவர்களைப் பாராட்டியும், போற்றப்படவேண்டிய பொருளை, உணர்வுகளைப் போற்றியும் எழுதி இருக்கிறார். வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல் உலகம் என்று இருந்த நிலை மாறி, இன்று உலகின் பல பகுதிகளிலும் குடியேறித் தமிழ் இனம் பார்தழுவிய இனம்ஆக வாழுகிறது. ஆனால் தமிழர்கள் தாங்கள் வாழும் எல்லா இடத்திலும் சிறுபான்மையர். சிறுபான்மையரில் மதிக்கப்படும் சமுதாயமும் உண்டு; பலவகையினும் வருத்தப்படும் சமுதாயமும் உண்டு. 1956 இல் இருந்து நாள் ஒரு மாற்றமும் பொழுதொரு இழப்புமாகத் தமிழ் இனம் இலங்கையில் 30 ஆண்டு காலம் வரலாறு காணாத இன்னலுக்கும், இழப்புக்கும், சில சமயங்களில் கொடுமைக்கும் ஆளாகி வந்து இருக்கிறது. இன்றை நிலையை விட நாளை மேலாக இருக்கும் என்ற நம்பிக் கையில் வாழ்ந்து வருவது மனித இனம். அந்த நம்பிக்கை வற்றும் போது வளர்ச்சியில்லை. வாழ்வில் துடிப்பு இல்லை. முயலும் அளவுக்கு மனத்தில் திண்மையில்லை. இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரை இன்றைவிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை மோசமாக இருக்குமோ என்ற அச்சத்துடனும் ஆதங்கத்துடனும் கால் நூற்றாண்டுக்குச் சற்று அதிகமாகவே வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய இன்ப துன்பங்களில், கவலைகளில் அந்த மக்கள் சிந்திய கண்ணீரில் முழுமையாகப் பங்கு பெற்றவர் திரு. இர்த்தினம் அவர்கள். சிறந்த தமிழ் அன்பர்; எனினும் எதிலும் தீவிரவாதி அல்லர். மக்கள் விருப்பத்தை மதித்து அவர்கள் உரிமைக்காக போராடியவர்; ஆனால் வன்முறையாளர் அல்லர். நிதானத்தோடும், நெறியோடும், வரம்புக்குள் நின்று வழி தவறாது நீதிக்காகப் போராடி வந்தவர் பல நூல்களுக்கு ஆசிரியர் குறிப்பாகத் திருக்குறளில் ஆழ்ந்த ஈடுபாடும், நுண் பொருள் காணும் புலமையும், சென்றவிடமெல்லாம் அதன் சிறப்புப் பற்றிப் பேசும், எழுதும், சிந்தனையும் கொண்டவர், அப்படிப்பட்ட ஒருவரின் உணர்வுகளை, சிந்தனைகளை, ஆசைகளைத் தாங்கி வரும் நூல் தான் இமயத்து உச்சியில் என்னும் கவிதைத் தொகுப்பு. மரபுக் கவிதையை வாயிலாகக் கொண்டு, தமது எண்ணங்களை எடுத்துரைக்கிறார். கவிதை, பல பொருள்கள் பற்றி அமைந்திருக்கிறது.

போற்றுவதும் தகுந்தவரைப் புகழ்வதும் ஒரு நல்ல சமுதாயத்தின் பொறுப்பு. திரு. ஆறுமுக நாவலரைப் பற்றி எண்ணி,

'நாமணக்க அவதரித்த நாவலர்தாள் இறைஞ்சும்' கவிஞர்,

"பூச்சிந்தும் நறுந்தேன்போற் பொருளோடு
சொல்லணிசேர்......
நாச்சிந்தும் இசைகொண்ட நாவலரை வணங்குதுமே"

என்று வணங்குகிறார். பாரதியைப் பற்றிப்பாடும் பொழுது உணர்வுப் பிழம்பாக நிற்கிறார்:

"துடிப்பு நிறைந்து சுவைகள் துள்ளும்
கவியின் துங்கப் பாடல் களினைப்
படித்து விட்டால், ஒருவர் படிக்கப்
பக்கம் நின்று கேட்டு விட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் ... யாழ்ப்பாணம்.

இடித்து மனத்தைத் தேற்றும், துளைக்கும்,
ஈர்க்கும், உருக்கும், உயர்த்தும், புதுக்கும்,
அடிக்கும், அணைக்கும் அவற்றின் காந்தம்
அவனி காணா விந்தை அன்றோ!''

**என்று அவர் கூறும்பொழுது அப்பாடலைத் திரும்பத் திரும்பப் படிக்கும் ஆசை எழுகிறது**. பெரியாரைப் பற்றிய அவரது கணிப்புப் பின்வருமாறு :

''முன்னரும் காக்க முயன்றனர் சிலபேர்
முழுப்பயன் கிடைத்திட வில்லை:
அன்னவர் வழியில் அடிவையா தெவரும்
அஞ்சிடும் புதுவழி சென்று
தென்னவர் மகிழத் திராவிடர் கழகம்''

மூலம் தொண்டு செய்தவர் என்கிறார்.

அன்னை இந்திராகாந்தி இறந்தபொழுது அவரை இந்திய நாட்டின் பிரதமர் என்று குறிப்பிடவில்லை; இந்திய மண்ணின் தலைவர் என்று குறிப்பிடவில்லை. **''காக்க வந்த தெய்வம்' என்கிறார்**. இலங்கைத் தலைவர்கள் அன்னை இந்திராகாந்தி மீது வைத்திருந்த மதிப்பிற்கும் நம்பிக்கைக்கும் எடுத்துக்காட்டாக இந்தத் தலைப்பு அமைகிறது. அவர் கொடிதினும் கொடிதெனக் கண்ணீர் வடிப்பது ஒரு துரோகம் பற்றியதாகும்.

''கண்ணை இமைகள் கெடுப்பதிலும்
காக்கும் படைகள் பழிவாங்க
எண்ணி மக்கள் தம்மைச்சுட்
டெரிக்கும் பழிசேர் கொடுமையிலும்
அண்டி நின்று காப்பதையே
அரிய புனிதப் பணியாகக்
கொண்டோர் சுட்டுக் கொன்றழித்த
கொடுமை கொடிது கொடிதன்றோ!''

**இப்பாடலை முழுவதும் படிக்கும்பொழுது கண்கள் பனிக் கின்றன. உணர்வுகள் பொங்க உள்ளம் அமைதியாக அழுகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. இரத்தினம் அவர்கள் இக்கவிதை நூல் முழுவதையும் அரசியல், சமுதாயம், மொழி ஆகியன பற்றிய தலைப்புகளிலேயே எழுதியிருக்கிறார். என்றாலும் இயற்கை வருணனையில் அவரது திறன் ஆங்காங்கு காணப்படுகிறது.

பொதுவாகத் தேர்தலுக்கு நின்று மக்கள் வாக்கின் திறத்தின் அடிப்படையில் பதவி நாடுவோர் சமுதாயப் பிரச்சனைகளை அணுகுவது இல்லை. சமுதாயத்திலிருக்கும் பல கொடுமைகளை. மூடப்பழக்கவழக்கங்களைச் சாடுவது இல்லை. ஆனால் **கவிஞர் இரத்தினம் பல பாடல்களில் தீண்டாமையிலிருந்து மூடநம்பிக்கை வரை நம்மை வாட்டும் பல கொடுமைகளை எதிர்த்துக் குரல் எழுப்புகிறார்.**

தமிழ் மொழி கண்ட தனித்தன்மை வாய்ந்த பல இலக்கியங்களை ஆழ்ந்து படித்தவர். அவற்றின் அழகில் மனதைப் பறிகொடுத்தவர். வள்ளுவர் தம் திருக்குறளை மனதாரப் பாராட்டுகிறார். எழுத்துக்கும் சொல்லுக்கும் இந்தச் சொற்கள் எடுத்துரைக்கும் பொருளுக்கும் இலக்கணத்தை வகுத்து முறையாக வழி காட்டும் தொல்காப்பியத்தை அதன் நுட்பத்தை அது தாங்கி நிற்கும் கருப்பொருளை மனம் திறந்து போற்றியவர் அதைத் தமிழ் இனத்தின்: ''நன்மைமிகு நாகரிகம் நற்பண்பெல்லாம் நானிலத்தோர்க் குரைக்க இந்நூல் ஒன்றே போதும்'' என்றுகூறுகிறார். சிலப்பதிகாரம பற்றியும் சங்க நூல்கள் பற்றியும் பண்டைத் தமிழ்ப் படைப்புகள் பற்றியும் அவர் எழுதியுள்ள கவிதைகள் பார்க்கத்தக்கன. படிக்கத் தக்கன. நினைவில் அவை நிற்கத்தக்கன.

பொதுவாக எந்த ஒரு இனமும் தனது உரிமையை விழிப்போடு இருந்து காப்பாற்ற வேணடும். சிறுபான்மை இனத்திற்கு இது மிகவும் முக்கியம். அந்த விழிப்பின் தேவையை ''**தமிழரே உறங்காதீர்**'' என்ற தலைப்பில் அழகாக எடுத்துரைக்கிறார்.

''மொழியுரிமை பறிபோனால்
முழுவாழ்வும் அழிந்துவிடும்
பழியுடைய குலத்தினராய்ப்
பணிந்தொதுங்கி வாழாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

இழிவகற்றும் வழிவகுத்தெம்
இனியதமிழ் அரசுபெற
எழிலுடைய தமிழர்காள்
எண்ணிஎண்ணி முயன்றிடுவீர்.''

கவிஞர்கள் கனவு காண்பவர்கள். கற்பனையாளர் கள்; மண்ணிலும் விண்ணிலும் உலவும் மனம் உடைய வர்கள். ''கற்பனையின் திறன் நாளை இயலும் வாழ்வைக் காணுவது; செயல் உலகக் கண்கள் இன்றிச் சொற்சிலம்பம் ஆடுவதும் சூனியத்தில் சொர்க்கத்தைக் காணுவதும்'' கவிஞன் கூற்று அன்று! அதே சமயத்தில் கனவும், கற்பனையும், இயலாததெனினும் எட்டிப் பிடிக்கும் ஆசையும் இல்லா இடத்தில் கவிதை இல்லை. உரிமைக்குப் போரிடத் தமிழர்களை அழைக்கும் அதே மூச்சில் வெற்றி கண்டனர் தமிழர்கள் என்று அறிவிக் கின்றார்.

''பொய்யும் புரட்டும் பரப்பிஎங்கும்
பொன்னும் பொருளும் அள்ளிவீசி
மெய்யை மறைத்த பகைவர்கள்
மேலும் மேலும் திட்டம்போட்டு
உய்ய விடாமல் இனக்கொலையை
ஊக்கி எம்மை அழித்தொழிக்கச்
செய்த சூழ்ச்சி தகர்த்தெறிந்து
தீரத் தமிழர் வென்றுவிட்டார்.''

என்று பிரகடனம் செய்கிறார். ஈழத்தின் இன்றைய நிலையில் குழப்பங்கள் காணப்படுகின்றன என்றாலும் பல சிக்கல்கள் தோன்றுகின்றன என்றாலும் நீண்டகால மாக இலங்கைத் தமிழர்களை நீங்கா நிழல் போலத் தொடர்ந்து வந்த ஒரு பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் வெற்றிகரமான முதல் அடியை எடுத்து வைத்து விட்டோம் என்ற நம்புகிறோம். எனவே கவிஞர் அவர் தம் 'வெற்றி வெற்றி' என்ற பாடல் கனவாக இன்றி நன வாகும் என்று எதிர்பார்ப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயப்புரை

பெருங்கவிக்கோ, டாக்டர்
**வா. மு. சேதுராமன் அவர்கள்**
எம். ஏ., பி. எட்., டி. லிட்.

உலகளந்தான் அன்பில் உளமளந்தான் ஈழ
நிலமளந்தான் ஈன்ற நினைவால்—தலமளந்த
ஒப்பிலாக் **கா. பொ. ஒளிசேர் இரத்தினந்தான்**
**முப்பால் குறள்போன்றான் முன்**

**''இமயத்தின் உச்சியில்''** என்னும் கவிநூல்
**அமரர் அமுதத்தின் ஆறாம்**—கமகமக்கும்
**கொள்கைத் தெளிவுநூல் கோவில் கலசம்போல்**
**வள்ளல் அருள்நூலை வாழ்த்து**

மொழிகாத்து நம்முடைய முத்தமிழ் காத்து
வழிநெறி காத்து வளமார்—விழிபோன்ற
நல்லுரிமை காத்து நலம்சார் இரத்தினத்தார்
**வெல்லுரிமை காக்கும் வேந்து**

வீரப்புலிகளின் வெற்றியைப் பாடுகின்றார்
சோரம் போனாரைச் சுடுகின்றார்—ஆரத்தை
**ஈழமாம் தாயகம் ஏற்றமுறச் சூட்டுகின்றார்**
வாழஉரைக்கின்றார் வழி.

வள்ளுவம் போல் வையக வாழ்வுநெறி நூலுண்டோ
தெள்ளிய ஆய்ந்த திறமுண்டோ—உள்ளத்தை
ஊக்கும் அறநூலும் உண்டோ எனவினவித்
**தேக்கும் சுவைக்கவிநூல் சித்து.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

எதை ஒழிக்க வேண்டும் எதற்கொதுங்க வேண்டும்
அதை அதை அவ்வழி ஆற்றி—விதைவிதைக்கும்
ஞானஒளி காட்டும்நம் கா. பொ. இரத்தினத்தார்
வானத் தமிழ்ப்பா வாழ்த்து

பகுத்தறிவும் உண்டு பணிஅறிவும் உண்டு
வகுத்தறியும் வாழ்வுண்டு வாஞ்சை—தொகுத்தறியும்
பல்வகை யான பயன்சேர் அனுபவத்தின்
கல்வியும் நன்குண்டு காண்.

மாப்புலவர் நற்றமிழ் வாழ்க்கை அறப்புலவர்
பாப்புலவர் செந்தமிழ்ப் பண்புலவர்— கோப்புலவர்
யாருமே ஆற்றா நலத்தொண்டின் மேற்புலவர்
சீருடன் வாழ்க செழித்து.

நஞ்சைப் பெருக்கினால் நல்லமு தாகுமா
விஞ்சுநெருப் பும்நெருப்பை வெல்லுமா—செஞ்சொல்
வினாத் தொடுத் தன்பை விளக்கும் கவிஞர்
கனாநன வாகுமே காண்

வாழிய கா. பொ. வளமார் கவிஅரசர்
வாழிய அன்னார் வளராயுள்—வாழியவர்
ஏரார்ந்த தொண்டு இரத்தினப் பேரறிஞர்
சீரார்ந்து வாழ்க சிறந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் உரை

**பேராசிரியர் சாலை இளந்திரையன்,**
**டாக்டர் சாலினி இளந்திரையன்.**
தமிழியல் ஆராய்ச்சி மய்யம்,
**பேரவை இல்லம், சென்னை. 86**

அறிஞர் பெருமகன் கா. பொ இரத்தினம் அவர்களைப் பற்றி நினைப்பதும் எழுதுவதும், அவரைப் பற்றி நன்கு அறிந்துள்ள எம்போன்றார்க்கு இனிய அனுபவங்கள். பன்னூலாசிரியராகிய இந்த நல்லவரின் ஒரே ஒரு புத்தகத்துக்கு என்று சில சொற்களை எழுதுவதைவிட, அவருடைய பன்முகச் சாதனைகளின் ஒரு விளிம்பையாவது நினைவு கூர்வதையே நாங்கள் தக்கதென்று கருதுகிறோம்.

கா. பொ. இரத்தினம் அவர்களின் செயல்திறம், சக்தி வாய்ந்த ஓர் அரசியல்வாதி (நாடாளுமன்ற உறுப்பினர்) என்ற அளவோடு நின்றுவிடவில்லை. அரசியலுக்கு வருமுன்பே தமக்கென்று ஒரு சாதனைத் தளம் அமைத்துக் கொண்டு அதிலே செம்மாந்து நின்றவர் அவர். பலருக்கு வாய்க்காத தமிழியல் சாதனைத்தளம் அது.

1962 ஆம் ஆண்டில் தமிழ் ஈழத்து வேலணையில் அவர் சிறப்பாக ஏற்பாடு செய்த திருக்குறள் மாநாட்டிலே தான் அவரோடு எங்களுக்கு நேரிடையான தொடர்பு ஏற்பட்டது. அதற்குப் பல்லாண்டுகள் முன்பே ஒரு தமிழ் அறிஞராகவும் பேராசிரியராகவும் தமிழ் உலகம் அவரை நன்கு அறிந்திருந்தது. தமிழகத்தில் தகு செல்வாக்குப் பெற்றிருந்த அவருக்குத் தமிழ் ஈழமெங்கும் ஏற்பட்டிருந்த பெருமதிப்பை, அப்போது (1962) அவர் அந்நாடு முழுவதும் எங்களுக்காக ஏற்பாடு செய்து நடத்திய இலக்கிய நிகழ்ச்சிகள் மூலம் உணர்ந்து உவகை கொண்டோம்.

அது தொடங்கி, கா. பொ. இ. அவர்களுக்கும் எங்களுக்கும் நெருங்கிய தொடர்புறவு இருந்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1962இலும் 1974இல் 4 ஆவது உலகத்தமிழ் மாநாட்டின் போதும், அவரும் அவர் துணைவியாரும் காட்டிய அன்பிலே விருந்தோம்பலுக்கே முற்றான இலக்கணத்தைக் கண்ட நாங்கள், அதன் பிறகு விருந்தோம்பலை ஏற்றுக் களிக்கும் நளின நாகரிகத்தையும் அன்னாரிடம் இனிதே கண்டு மகிழ்ந்துள்ளோம்.

1964 இல் இந்தியத் தலைநகரில் நடைபெற்ற கீழைத் தேயக் கலை, பண்பாட்டு ஆய்வாளர்களின் 26 ஆவது மாநாட்டில் **உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் (அய். ஏ. ட்டி. ஆர்)** உருவாயிற்று. அதன் தந்தையும் தாயும் அறிஞர் கா. பொ. இரத்தினம் அவர்களும் தனிநாயக அடிக ளாருமே ஆவார்கள். அதன் தோற்றுநர் பட்டியலிலே உள்ள நாங்கள் இருவரும் உடன் நின்று உதவியவர்களே.

உலகு தழுவிய ஒரு தமிழ் அமைப்பு வேண்டும் என்ற எண்ணம் இப் பெருமகனாருக்குப் பலகாலமாகவே இருந்து வந்தது, தமிழ் மறைக் கழகத்தை உருவாக்கித் தமிழ் மக்களிடையே குறட் செய்தியைப் பரப்பி வந்த நாளி லேயே இந்த எண்ணம் அவர் நெஞ்சில் கருக் கொண்டு நிலைத்தது. மேற்படி தில்லி மாநாட்டுக்கு முன்பு மலேசியாவில் தமிழ்த்தொண்டு புரிந்து வந்த நாளிலேயே, உலகத் தமிழ் மன்றம் என்னும் அமைப்பை அவர் உருவாக்கி விட்டார். அதன் தொடர்ச்சியாக அனைத் துலகத் தமிழ் அறிஞர்கள் இணைந்த உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம் 1964இல் தில்லியில் உருவாயிற்று.

இவர் ஒரு வயிற்றுத் தமிழாசிரியரல்லர்-மாண்பு நிறைந்த வாழ்வுத் தமிழறிஞர் என்பதை, அடுத்து வந்த அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் தெள்ளென ஒலித்துக் காட்டின. நாளாக நாளாக, சிறீஇலங்கை அரசு தமிழரின் உரிமைக் குரலை நெரிக்கவே திட்டங்கள் தீட்டியபோது, நேரடி அரசியலில் இறங்கி, இலங்கை நாடாளுமன்றத் திலேயே அரசின் தமிழ் இனமொழி அழிப்புக் கொள்கை களை எதிர்த்து முழக்கமிட்டார் அறிஞர் இரத்தினம். இந்தப் பின்னணிகள் இருந்ததாலேதான் போர்முகத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிப்போத்துகளை வியந்து விதந்து ஓதுகிறார் இவர்.

அழிக்கும் தொழில்கள் அனைத்தும் செய்யும்...
சிங்களப் படையைச் சீறி எழுந்து
சிறுசுடர் முன்னர்ப் பேரிருள் இரிதல்
போல ஓட்டிப் பொங்கிக் கனன்று
இழந்த நாடாம் ஈழத் தாயகம்
தன்னை மீட்கத் தங்கள் உயிரைக்
கொடுத்துப் போரிடும் கொல்புலி போன்ற
மறத்தமிழ் இளைஞர், மாபெரும் வீரர்! (பக். 29)

பதினொரு பகுதிகளாக அமைந்த '**இமயத்து உச்சியில்**' என்னும் இந்தப் புத்தகம் இரத்தினத்தாரின் வாழ்க்கை அனுபவங்களின் முறையான எதிரொலியாக விளங்குகிறது. அவருடைய தமிழ்ப் புலமை, தமிழ்ப் பெரும் பற்று, தமிழ் மக்களீடுபாடு, தமிழ்-தமிழர் தொண்டு என்னும் அனைத்திலும் தோய்ந்து விளைந்தவை இந்தச் செய்யுட்கள். எனவே, அவைகளை விமர்சனம் செய்து கொண்டு பொழுதைப் போக்காமல். அவரோடு சேர்ந்து நின்று, அவர் விடுக்கும் அறைகூவலையே, தமிழ் மக்களுக்கு நாங்களும் விடுக்கின்றோம்.

**பைந்தமிழை அரியணையில்**
ஏற்றிமுதல் இடமளிக்க
எல்லோரும் இயன்றபணி
ஆற்றிடுதற்கு உறுதி கொண்டால்,
அவனியிலே தலைநிமிர்ந்து
மானமுள்ள இனத்தினராய்
மங்காத புகழுடனே
ஊனமின்றி வாழ்ந்திடலாம் உய்ந்து...

—**சாலை-சாலினி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணகம் நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# 1

# இயற்கை

156838

## 1.1 இமயத்து உச்சியில்

713 2 CC

உலகிலுள்ள பெருமலைகள் பலவற்றில்
இமயத்தை ஒக்கப் பாட்டில்
இலகிடுமோர் மலையில்லை எனல்உயர்வு
நவிற்சியன்றே ஏற்றஞ் சான்ற
புலமைமிக்க பெருமக்கள் கற்பனையிற்
கருத்திலிது பொலிந்து நின்று
குலவிடுநற் காட்சிகளை மக்களுக்குக்
காட்டியிசை கொள்ளும் அன்றோ!

முத்தமிழைப் போல்நிலைத்து முழுஉலகும்
புகழ்பரப்பி முழுதும் ஓர்ந்த
வித்தகர்கள் போலுயர்ந்து, விசும்பதனை
அளக்குமிந்த வெள்ளி வெற்பைச்
சித்தமதில் மகிழ்ச்சிபொங்க வானூர்தி
தனிற்கடந்து சென்ற போழ்தில்
இத்தரையில் வேறெங்கும் காணவொண்ணாக்
காட்சிகளை இனிது கண்டேன்.

*　　　*　　　*

கொடிகள் செடிகள் மரங்களுடன்
குலவி மிளிரும் அடிவாரம்
குடிசை நிறைந்த சிற்றூர்கள்
கொண்டு பச்சை நிறைந்திலங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியிற் செழுமை குடியிருக்கப்
பற்றிக் கொண்ட இவ்விடத்தைக்
கடிதில் நீங்கி மேற்செல்லக்
காட்டு வலயம் விருந்தளிக்கும்.

எங்கும் பச்சைக் கம்பளத்தை
எழிலுக் கெல்லை காட்டுதல்போல்
பொங்கும் அழகு பூத்துமிகப்
பொலிய விரித்தே இடையிடையே
சங்கு முத்து வடங்களினைச்
சரித்து நெளித்துப் பிணைத்தாற்போல்
அங்கு வளரும் காடுகளும்
அருவித் திரளுங் காட்சிதரும்.

மேலும் மேலும் உயர்ந்துசெல்ல
மிகுந்த பசுமைக் காடொழியப்
பாலுந் தோற்கும் வெள்ளைநிறப்
பனியின் படலம் படிந்தொளியைக்
காலும் காட்சி கண்களினைக்
கவர்ந்து கருத்தில் இனிக்குமிதைப்
போலும் இயற்கைக் காட்சியினைப்
புகல வார்த்தை கிடைத்திடுமோ?

உலகில் எதுவும் ஒப்பின்றி
உயர்ந்த பீட முகடேறி
அலகில் வெளியைப் பார்க்கையிலே
அமைதி அன்றி வேறொன்றும்
குலவும் மனத்தில் உறையாது
குளிர்ந்த பனியின் படலங்கள்
பலவாய்ப் படிந்து பாற்கடல்போற்
பரந்து காட்சி அளிக்குமங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கு மிடங்கள் முழுதிலுமே
பரந்து கிடக்கும் பனிப்படலம்
ஆர்க்குங் கடலின் அலையுருவம்
அடைந்து தோன்றும் குவடுகளைப்
போர்க்கும் நெடிய பனிப்படலம்
**போருக் கமைத்த பாசறைபோல்**
யார்க்கும் தோன்றும் உருக்கொண்டே
அங்கும் இங்கும் உயர்ந்துநிற்கும்.

எந்த உயிரும் வாழாத
எல்லை நீத்த உயர்வெளியில்
அந்தம் இல்லாப் பெருவானும்
அளவில் பனியின் படிவுகளும்
இந்த வெள்ளைப் படிவுகளுக்
கிடையில் தோன்றும் செம்பாரும் !
**உந்தும் அமைதி தனில்மூழ்கி**
**உள்ளம் தன்னை மறந்திடுமே.**

---

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.2 அந்தி மயக்கிடும் நேரத்தில்...

அந்தி மயக்கிடும் நேரத்தில்-நிறை
அழகைச் சொரியும் பெருங்கடல் ஓரத்தில்
சொந்த உலகை மறந்திடலாம் - உள்ளம்
சொக்கிடப் பேரின்ப வானிற் பறந்திடலாம்.

பகலோ டிரவு உறவாடும் - அங்கே
பரந்தநிலத் தோடு கருங்கடல் போராடும்
அகல்வானம் அக்கடலைக் கொஞ்சும் - எங்கும்
அலைகள் கொணரும் நுரைக்கணம் துஞ்சும்.

நெருப்பினால் ஆக்கிய பந்தை - மிக
நிகர்த்தே கதிரோனுங் காட்டுவான் விந்தை
விரும்பி விழுவான் கடலில் - நிறம்
விதம்விதமாய்த் தோன்றிடும் வானத் துடலில்.

வானப்பெண் காட்டிடும் ஓவியங்கள் - எந்த
வார்த்தையும் தீட்ட முடியாத காவியங்கள்
கானமும் ஓவியத்தைப் போற்றும் - அங்கே
கண்ணுக் கடங்காத பேரழகு தோற்றும்.

கடலிலே மீன்கள் குதிக்கும் - மேலே
ககனத்தில் மீனினம் மெல்ல உதிக்கும்
படகிலே மீனவர் செல்வர் - ஓங்கிப்
பாய்ந்து வரும்பேர் அலைகளை வெல்வர்.

அலைகளும் ஓயாது தோற்றும் - மக்கள்
அகத்தெழும் எண்ணத் தொகையினைச் சாற்றும்
கலைஞர் புகழுமிம் மாட்சி - என்றும்
கண்ணுங் கருத்தும் மகிழ்வுறுங் காட்சி.

(அந்தி மயக்கிடும் நேரத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# தமிழ்ப் போராட்டம்

## 2.1 தமிழைப் போற்றுக

தமிழரென்று பெயர்கொண்டோர்
தமிழ்த்தாயை மதிக்காமல்
உமிதன்னை அரிசியுடன் உலைஏற்றி அடுவார்போல்
மானத்தை அழிக்கின்ற மதிகெட்ட செயல்களினை
ஊனமது மிகப்பெருக உணர்வின்றிச் செய்துவரும்
பண்புகெட்ட நிலைமையினைப்
பார்த்திடவே பெருந்துன்பம்
புண்ணுள்ளே பெருநெருப்புப் புகுந்துநின்று சுடுதல்போல்
**உள்ளத்தைச் சுடுகுதம்மா! உணர்ச்சியினைக் கருக்குதம்மா!**
எள்ளளவு மொழிப்பற்றும் இன்றியிவர் வாழ்கின்றார்.

திரைப்படத்தால் தமிழருக்குச் சேவைபல செய்தற்கு
விரைகின்ற பெருமக்கள் வேற்றுமொழிச் சொற்களினைத்[1]
தமிழ்எழுத்தில் வரைந்தின்றும் தயங்காமல் தருகின்றார்;
அமிழ்தனைய தமிழ்ப்பண்பை அழிக்கின்ற காட்சிகளை
அருவருப்புக் கொள்ளாமல்
அமைத்தெமக்குக் காட்டுகின்றார்.

---

1. "புரொடக்ஷன், ஆர்கெஸ்ட்ரா, புரொஸசிங், போட்டோகிராப், புரொட்யூசர், டைரக்ஷன்" போன்றுள்ள பலவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தவழி சொன்னாலும் சிறிதுமிவர் உளங்கொள்ளார்.
**காசினிலே கண்வைத்துக் கலைவணிகம் செய்திட்டால்**
**மாசினையே பெருக்கியது மக்களையுங் கெடுத்திடுமே!**

நாளும்நாற் கிழமையும் நமக்கிசைந்த விருந்தளிக்க
மூளுகின்ற போட்டியுடன் முயன்றுவரும் **ஏடுபல**
நயம்மிக்க பலசொற்கள் நம்மொழியில் இருக்கத்தம்
வயமிழந்து மரபிறந்து வரையறையை மிகக்கடந்து
பிறமொழியின் சொற்களினைப்[2]
பிடித்திழுத்துத் தமிழுடனே
உறவாக்கித் தமிழ்த்தாயை உருக்குலைக்கும் பணிதன்னை
அஞ்சாமற் சோராமல் ஆற்றுவதால் உருக்கரந்த
நஞ்சைப்போல் விளைக்கின்ற நட்டங்கள் பலவன்றோ!

மலர்மாலை தொடுத்திடுவோர் மதியின்றிக் காகிதப்பூ
சிலவற்றை இடையிடையே
சேர்த்தெழிலைச் சிதைப்பதுபோல்
தமிழ்எழுத்தை இட்டெழுதத் தக்கபல சொற்களிலே
**துமியினைப்போல் நிலையிழந்து**
**தொலைந்துவிட்ட கிரந்தமெனும்**
எழுத்ததனை வேண்டுமென்றே
இட்டெழுதும் கொடுமைஎன்னே![3]
அழுந்திவந்த பழக்கத்தால் ஆங்கிலத்தின் எழுத்துக்கள்
இன்றித்தம் பெயர்களினை எழுதுதற்கு[4] எண்ணாதார்
**இன்றுமுளர் என்றால்நம் இழிநிலைமை எத்தகைத்து?**

---

2: "மியூசிக் அகாடம்மி, மெஜாரிட்டி, இங்கிலிஷ், நியுஸ்பிரிண்ட், பார்லிமென்டு, மெம்பர், ரோட்" கருதுக.

3. "புஸ்தகம், காங்கிரஸ் ராஜ்யம், பொதுஜனம்" காண்க.

4. "J. நாகராஜன், S.F.T. தவராசா, எம். வேந்தன்" நோக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

**தம்வாழ்வின் துறையெல்லாம்
தண்டமிழுக்கு உயர்வளிப்போர்
நம்மிடையே இலரெனலாம். நாடறிந்த உண்மையிது.
ஆலயத்தில் விஞ்ஞானம் ஆய்கின்ற மனைதன்னில்
காலத்துக்கு ஏற்றபல கலையூட்டுங் கழகத்தில்
பூத்துநல்ல புகழ்பரப்பிப் பொலிந்திருந்த தன்னாட்டில்
மூத்ததமிழ் தனக்குரிய முதலிடத்தைப் பெறவில்லை!**

**எம்மினத்தின் வாழ்விலுள்ள எண்ணரிய குறைகளுக்குச்
செம்மைவழிப் பட்டெங்கள் செந்தமிழைப் போற்றாமல்
பிறமொழிகள் மயக்கியிடப் பின்சென்றே நம்பண்புத்
திறம்மறந்தும் உளம்பிறழ்ந்தும் சிந்திக்கும் ஆற்றலினை
இழந்தமையே காரணமாம் என்றுணர்வீர்! இனியிந்தப்
பழக்கத்தை அறவொழித்துப் பைந்தமிழை அரியணையில்
ஏற்றிமுதல் இடம்அளிக்க எல்லோரும் இயன்றபணி
ஆற்றிடுதற்கு உறுதிகொண்டால்
அவனியிலே தலைநிமிர்ந்து
மானமுள்ள இனத்தினராய் மங்காத புகழுடனே
ஊனமின்றி வாழ்ந்திடலாம் உய்ந்து.**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2.2 தமிழரே உறங்காதீர்!

**என்னருமைத் தமிழர்காள்! எழுச்சிமிக்க பெருந்தகையீர்!**
பொன்னடிக்கு வணக்கம்நான் புகலுமிந்த உண்மையினை
உன்னிஉன்னிப் பார்த்துங்கள் உளத்தினிலே பதியுங்கள்
என்னவந்த தெமக்கிங்கே என்றினிமேல் உறங்காதீர்.

**மொழியுரிமை பறிபோனால் முழுவாழ்வும் அழிந்துவிடும்**
பழியுடைய குலத்தினராய்ப் பணிந்தொதுங்கி வாழாமல்
இழிவகற்றும் வழிவகுத்தெம் **இனியதமிழ் அரசுபெற**
எழிலுடைய தமிழர்காள் எண்ணிஎண்ணி முயன்றிடுவீர்.

''நீரழிக்கச் செல்லழிக்க நெருப்பழிக்க நிலைத்ததமிழ்ச்
சீரழிக்க வல்லார்யார் செப்பிடுவீர்'' என்பீரேல்,
'தார'ழிக்கப் பார்த்திருந்தீர் தயங்காமல் **தமிழினத்தின்**
**பேரழிக்க முயல்கின்றார் பேடிகள்போல் வாழாதீர்.**

இவர்செய்வார் அவர்செய்வார்
எமக்கென்ன என்றிருந்தால்,
எவர்செய்வார் தமிழ்ப்பணிகள் எமக்குற்ற பெரியோர்கள்
அவஞ்செய்தே கெடுத்துவிட்டார்; அவருக்கும் அறிவூட்டித்
தவஞ்செய்தே **பெறும்வெற்றி தழைத்தோங்கப் பணிபுரிவீர்.**

மொழியுரிமை தனக்குவிலை
மொழிந்தெங்கள் குலத்தினுக்கே
பழியுரிமை கொள்ளுகின்ற பண்பில்லாச் சிறியோர்கள்
விழியிழந்தே வாழ்ந்திடற்கு விழைகின்றார் இவர்களைநல்
வழியினிலே புகுத்தியிந்த வசையினையும் நீக்கிடுவீர்.

என்றுமெங்கும் தமிழென்றே எத்திசையும் குரலெழுப்பித்
துன்றுமிடர் சூழ்ந்தாலும் துலங்குதமிழ்த் தாயினுக்கே
இன்றுதொட்டு முதன்மையினை
எம்வாழ்விற் கொடுத்திடுவோம்
**என்றுறுதி கொள்வீரேல் எண்ணியன அடைந்திடுவீர்.**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.3 இளைஞர்களே எழுங்கள்!

தமிழன்னை பெற்றெடுத்த தம்பியரே எங்கள்
அமிழ்தன்ன தாயின் அவலத்தைக் காணீரோ!

ஈழத் திருநாட்டில் இன்பத் தமிழ்மொழியை
வாழ வழிவகுக்க வாருங்கள்! வாருங்கள்!

பேரிடியைப் போன்றே பெருகிய துன்பத்தை
நேரடியாய்ப் போக்குதற்கு நேரம் இதுவன்றோ!

எங்கள் தலைவர்கள் என்செய்வோம் என்றென்றே
பங்கப் படுகின்றார் பல்லைக் கடிக்கின்றார்.

ஒன்றுபட்டால் நாங்கள் ஒருநாளுந் தோற்றிடோம்
என்பதனை இன்றுமவர் எள்ளளவும் எண்ணவில்லை.

நம்பி இருந்தால் நமக்கினி நாசமே
தம்பியரே வாருங்கள் தாயைப் புரந்திடுவோம்.

ஊர்முழுதும் ஒன்றுபட உண்டிங்கு நல்வழி
சோர்வுகொள்ள வேண்டாம்நான்
சொல்கிறேன் கேளுங்கள்.

* * *

அன்பார்ந்த அறவழியில் அமைந்து நின்றே
அசைவிலாத வீரத்தை அணிந்து போற்றித்
துன்பங்கள் வந்தாலும் தொலைத்துப் போக்கித்
துணிவுள்ள இளமையின் துடிப்புக் காட்டி
இன்பந்தான் தழைத்தோங்க இன்றே எங்கள்
இனியமொழி அரியணையில் இலங்கச் செய்ய
என்பெல்லாம் நெரிந்திடினும் எதிர்த்து வெற்றி
எய்திடவே கிளர்ச்சியினை எங்குஞ் செய்வோம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைகொடுத்துங் காத்திடுவோம் தமிழே! தாயே!
தன்மானம் விற்றெங்கள் தகுதி கொன்று
நிலைகெடுத்த தமிழருக்கும் நெறியைக் காட்டி
நிமிர்ந்தோங்கச் செய்திடுவோம் நின்மேல் ஆணை
விலைகொடுத்துத் தமிழினத்தின் வீரம் கொள்ளும்
விரகர்கள் முடிசாய்ந்து விழுந்து நடுங்கச்
சிலையெடுத்துப் போர்புரிவோம் சிரித்து வெல்வோம்
சிந்தித்து முடிவுசெய்தோம் சிறிதும் தாழோம்.

என்றுரைத்தே இளைஞர்காள் எங்குஞ் சென்றே
எடுத்திடுவீர் ஊர்வலங்கள் எழுச்சி நல்க
ஒன்றிணைந்தே ஊரெல்லாம் ஓடி ஓடி
ஒப்பில்லாக் கூட்டங்கள் உடனே கூட்டி
இன்றெமக்கு விளைந்திட்ட இன்னல் மாள
இக்கணமே எம்மினத்தை இழுத்துச் சேர்த்தே
ஒன்றுபட்டுச் **செந்தமிழின் உரிமைப் போரை**
**ஓங்கிடவே புரிந்திட்டால் உண்டே வெற்றி.**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.4 ஆசிரியர்களே வாருங்கள்!

நாட்டினிலே தமிழ்த்தாயை நசுக்குதற்குப் பலமுயற்சி
நடக்கப் பார்த்தும்
வீட்டினிலே பேசாமல் வீறிழந்தே இருந்திடுதல்
வீர வாழ்வோ?
ஏட்டினிலே கற்பிக்கும் எதனையுமே செய்யாமல்
ஏங்கி நீர்உம்
பாட்டினிலே இருக்காதீர் பாங்காகத் தொண்டாற்றப்
பறந்து வாரீர்.

**தமிழழிந்தால் இனம்அழியும்: தன்மானம் சிதைந்துவிடும்;**
**தமிழே!எங்கள்**
**அமிழ்தனைய தனித்தாயே!**
அறிந்துகொண்டோம் எழுந்துவிட்டோம்
அவலம் எல்லாம்
உமிழ்ந்தகற்றித் **தளராமல் உன்னையரி ஆசனத்தில்**
**உயர்த்தி வைப்போம்**
இமிழ்கடல்சூழ் வையத்தார் ஏத்திடவே உரிமைப்போர்
இன்றே செய்வோம்.

தித்திக்கும் **செந்தமிழே!** திசையளந்த **பைந்தமிழே!**
தெய்வப் பண்பால்
எத்திக்கும் புகழ்மணக்க எந்நாடும் தலைவணங்க
இருக்கும் **தாயே!**
புத்திகெட்டு மடியோம்உன் புகழ்நிறுத்தும்பணிபுரிவோம்
புனிதப் போரிற்
சித்திகிட்டும் வழியினையுன் சேய்களுக்குங் காண்பிப்போம்
சிறிதும் அஞ்சோம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுதமிழ் ஆசிரியர் எழுப்புமிடிக் குரலிலங்கை
எங்குங் கேட்க
நன்றறியா மக்களையும் நல்வீரர் ஆக்குதற்கு
நாலு திக்கும்
சென்றிடுவீர் மொழிப்பற்றைச்
சிறந்தஇன உணர்ச்சியுடன்
செழிக்கச் செய்வீர்;
இன்றிதுதான் குரவர்காள்! இன்றமிழை வாழவைக்க
ஏற்ற தொண்டே.

———

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

# 3

# தமிழர் போராட்டம்

## 3.1 முரசே கொட்டு!

வெற்றியென்று கொட்டு முரசே — எங்கள்
வீரத் தமிழர் அறப்போர்க்கு
வெற்றியென்று கொட்டு முரசே — பெரும்
வெற்றியென்று கொட்டு முரசே.

அறம்வெல்லக் கொட்டு முரசே—கொடியர்
அறிவுபெறக் கொட்டு முரசே
மறம்புரிவோர் ஆற்றல் இழக்கத்—தீமை
மடிந்திடக் கொட்டு முரசே.

மறந்தும் பிறர்கேடு சூழ்வோர்—இந்த
மண்ணுலகிற் கேடுற் றழிய
அறஞ்சூழும் என்ற மறையைத்—தீயோர்
அறிந்துய்யக் கொட்டு முரசே.

தமக்கும் தமதினத் துக்கும்—இங்கு
தனியுரிமை நாட்டிப் பிறர்க்குச்
சமஉரிமை நல்க மறுப்போர்—ஆட்சி
தகருமென்று கொட்டு முரசே.

தம்மொழியைப் போற்றிப் பிறர்தம்—அருமைத்
தாய்மொழியை வாட்டி ஒதுக்க
மும்முரமாய்ச் சூழ்ந்து முயல்வோர்—அழிந்து
முடிவரென்று கொட்டு முரசே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றல் உடையேம்என் றெண்ணி—நல்ல
அன்புநெறி விட்டு மறத்தைப்
போற்றிப் பிறரை வதைப்போர்—தொலைந்து
போவரென்று **கொட்டு முரசே.**

கொடுமை தலைதூக்கி ஆட—நீதி
குன்றச் சிறுபான்மை யோர்க்குக்
கெடுதி விளைக்கும் அரசு—விரைந்து
கெடுமென்று **கொட்டு முரசே**

தம்வாழ்வைப் போற்றக் கருதி—இங்கு
தம்மினத்தைக் காட்டிக் கொடுப்போர்
செம்மையுஞ் சீரும் இழந்து—பழியைச்
சேர்ப்பரென்று **கொட்டு முரசே**

மானத்தை விற்றுப் பகைவர்—காலில்
மண்டியிட்டு வாழ முயல்வோர்
ஈனச் செயல்கள் புரிந்து—பண்பை
இழப்பரென்று **கொட்டு முரசே.**

தாய்மொழியும் தங்கள் இனமும்—அடைந்த
தாழ்வினை நீக்கத் துடித்து
வாய்த்தபணி செய்யா மனிதர்—கொடிய
வஞ்சரென்று **கொட்டு முரசே.**

அறவழி தன்னில் உரிமைக்குச்—சிறிதும்
அஞ்சாது போரிடும் நல்லோரைச்
சிறந்த புகழுடனே வெற்றி—தேடிச்
செல்லுமென்று **கொட்டு முரசே.**

வெற்றியென்று கொட்டு முரசே—எங்கள்
வீரத் தமிழர் அறப்போர்க்கு
வெற்றியென்று கொட்டு முரசே—பெரும்
**வெற்றியென்று கொட்டு முரசே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.2 பறையே முழங்கு!

**பறையே முழங்கு** பாரில் எம்மைப்
பழித்துக் குறைத்துப் பகையை வளர்த்துச்
சிறையில் அடைத்துச் சீறி எரித்தோர்
சிதைந்தார் என்று **பறையே முழங்கு**

எங்கள் விருப்பம் இன்றி நாளும்
எம்மை அடக்கி இடித்து வதைத்துத்
தங்கள் ஆட்சி தளிர்க்கச் செய்தோர்
தகர்ந்தார் என்று **பறையே முழங்கு**.

பொய்யும் புரட்டும் புகன்று வெருட்டிப்
பொருவில் கொள்ளை பொல்லாக் கொலைகள்
செய்து நாளும் தீமை வளர்த்தோர்
செத்தார் என்று **பறையே முழங்கு**.

மனிதப் பிறப்பின் மாண்பு கொன்று
மாசு விளைத்து மதிகெட் டெம்மேல்
முனிவு கொண்டு முறுகி எழுந்தோர்
முடிந்தார் என்று **முழங்கு பறையே!**

இளைஞர் பலரை இடித்து நொறுக்கி
எரித்து வதைத்தே ஈடில் கொடுமை
விளைத்தெம் இனத்தின் வேரைப் பறித்தோர்
வீழ்ந்தார் என்று **முழங்கு பறையே!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம் ஆக்கிச் சதிகள் செய்து
சழக்குப் பேசிச் சகத்தை மயக்கித்
திட்டம் தீட்டித் தீங்கு செய்தார்
தீய்ந்தார் என்று **முழங்கு பறையே!**

ஆண்ட தமிழர் ஆட்சி கேட்க
அவலக் கடலில் அமுக்கி வதைத்த
மாண்பில் மாக்கள் மலைந்து வீழ்ந்து
மடிந்தார் என்று **பறையே முழங்கு**

உரிமை எல்லாம் உறிஞ்சி எடுத்தும்
உலகில் எம்மை உய்ய விடாமல்
எரித்தும் அழிக்கும் ஈனர் தொலைந்தார்
என்று **பறையே இடிபோல் முழங்கு.**

தமிழர் இறைமை தகர்த்துப் புதைத்துத்
தரணி பழிக்கத் தருமம் கொன்றே
அமிழ்தத் தமிழின் ஆட்சி பறித்தார்
அழிந்தார் என்று **பறையே முழங்கு.**

அசுரர் கொடிய அரக்கர் போல
அடக்கி ஒடுக்கி அடித்து முறித்துப்
பொசுக்கி எம்மைப் புதைத்தார் மாண்டு
போனார் என்று **முழங்கு பறையே!**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3.3 களம் காண வம்மின்!

வம்மின் உலகீர்! வம்மின் புலவீர்!
இம்மண் ணுலகில் எங்கும் காணாக்
கொடுமை கொலைகள் கொடிய வதைகள்
மட்டும் அன்றிப் பட்டினி போட்டும்
நிலததில் கடலில் நீல வானில்
நிலைத்து நின்று நெருப்புக் குண்டுகள்
குழந்தைகள் பெண்கள் கிழவரென் றெண்ணார்
பொழிந்தும் எரித்தும் சுட்டும் வெட்டியும்
ஆட்சி உரிமை கேட்ட தமிழரை
அழிக்கும் தொழில்கள் அனைத்தும் செய்யும்
இசுரே லியர்கள் இசைந்த பாக்கித்
தானியர் இழிபிரித் தானியர் சேர்ந்த
சிங்களப் படையைச் சீறி எழுந்து
சிறுசுடர் முன்னர்ப் பேரிருள் இரிதல்
போல ஓட்டிப் பொங்கிக் கனன்று
இழந்த நாடாம் ஈழத் தாயகம்
தன்னை மீட்கத் தங்கள் உயிரைக்
கொடுத்துப் போரிடும் கொல்புலி போன்ற
மறத்தமிழ் இளைஞர் மாபெரும் வீரர்
**வெற்றி யீட்டி நற்றமிழ் ஈழம்**
**பெறமுயல் களத்தைப் பார்க்கப் பாட**
**வம்மின் ஈழம் வம்மின் விரைந்தே.**

திணை: **வாகை,** துறை: **பேராண்முல்லை**

71320

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# வள்ளுவர் வான்மறை

## 4.1 திருவள்ளுவர் திருநாள்

**வள்ளுவரின் திருநாள் இன்றே — அவரை**
**வாயார வாழ்த்திக்கொண் டாடுவோம் நன்றே...**

உள்ளத் திருளினை ஓட்டும் - வாழ்வு
உயர்ந்திட நல்வழி எல்லோர்க்கும் காட்டும்
தெள்ளமு தாம்வான் மறையை—எங்கள்
செந்தமிழ்த் தாயருளால் செப்பிய சான்றோன்
(வள்ளுவ)

எல்லாச் சமயங்களும் ஏத்த—உலகில்
எந்நாடும் மாண்பினை எண்ணியெண்ணி வாழ்த்தப்
பல்வகைத் தீமைகள் நீங்க—நிலைத்த
பைந்தமிழ் நூலருளிப் பார்புரக்கும் சீரோன்
(வள்ளுவ)

சாதி சமயச் சழக்கு—ஒழியச்
சமதர்ம நல்லறம் தங்கி நிலைக்க
மேதினியில் எண்ணிய பெற்று—மக்கள்
மேலோங்கி வாழ வழிவகுத்த நல்லோன்.
(வள்ளுவ)

———

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.2 தமிழ்மறையின் தனிமாண்பு

இனியுலகில் எவரும்கண் டியம்பிடவே முடியாத
இனிமை மிக்க
தனிநெறியை உலகமக்கள் தலைநெறிதான் எனக்கொண்டு
தவிப்பே இன்றிக்
கனிவுறுநல் உள்ளத்திற் கரவின்றிப் பூசலின்றிக்
கவலை இன்றி
முனிவகற்றி வாழ்ந்திடவே முதற்புலவர் **தமிழ்மறையில்**
முன்பே சொன்னார்.

நல்லோர்கள் வகுத்துரைத்த நன்னெறிகள் பிறருடைய
நன்மை எண்ணாப்
புல்லோர்கள் தம்மாலே புவியோர்க்குப் பயனின்றிப்
போகச் சூதில்
வல்லோர்கள் முயன்றாலும் வடுப்படுத்த முடியாத
வழியைக் காட்டல்
எல்லோரும் வழுத்துகின்ற எழில்நிறைந்த **தமிழ்மறையின்**
**ஏற்றம் அன்றோ!**

அருளினுக்குப் பொருள்கூறி அன்பினுக்கு நல்லுருவம்
அமைத்துத் தந்து
பொருளினுக்கு வழிசொல்லிப்
புகழறத்தின் திறமுரைத்துப்
பொல்லாத் தீமை
இருளினுக்கு விடிவுணர்த்தி இன்பத்துக் கணைகட்டி
இழிவு செய்யும்
மருளினுக்கு மருந்தியம்பி வாழ்வுநெறி **வகுத்ததமிழ்**
**மறையே வாழி**.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.3 படித்துப் பயன் பெறுவீர் !

உலகம் எங்கும் உள்ள அறிஞர்
உயர்ந்த நூலென் றேத்திடும்
அலகில் புகழை அடைந்து மிளிரும்
அரிய நூலே திருக்குறள்.

அறத்தை அன்பை அரசின் பண்பை
அருளை விளக்கிக் கூறிடும்
மறத்தை நீக்கி மனிதர் உய்ந்து
வாழும் வழியைக் காட்டிடும்.

வறுமை வாட்ட வருந்தி வாடி
வதங்கி வன்மை மங்கினோர்
சிறுமை போக்கிச் செல்வம் ஈட்டச்
செம்மை வழியைச் செப்பிடும்.

அன்பைப் பெருக்கி அருளைப் பேணி
அறத்தை ஓம்பித் தாழ்விலா
இன்பம் தேக்கி இனிது வாழ
ஏற்ற வழியைச் சாற்றிடும்.

குறளின் திறத்தைக் கூற முயன்றால்
கூறும் சொல்லுக் கொள்ளுமோ
திறனை ஓர்ந்து தெளிந்து கற்றுச்
சிறந்த பயனை ஈட்டுவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

## 4.4 அவனி காணா அருமருந்து

ஊசியினால் மருந்தேற்றி உடல்நோய் தீர்ப்பர்
உள்ளத்து நோய்தீர்க்க ஒன்றுங் காணார்
தேசிழந்து சோர்வடைந்து தேய்ந்த உள்ளம்
திட்பமுடன் உயர்வதற்குத் திறமை மிக்க
மாசிணையாப் பெருமருந்து மனத்துக் கென்றே
மாண்புடைய வள்ளுவனார் மதித்துத் தந்த
ஆசிணையாத் **தமிழ்மறையே அவனி காணா**
**அருமருந்தாம்** இதன்திறனை அளப்போர் யாரே!

இரவினிலே சூழ்ந்திட்ட இருளைப் போக்க
இலங்குகின்ற மின்விளக்கிற்கு எல்லை உண்டோ?
கரவினுடன் பொறாஅமையுங் காழ்ப்புங் கொண்டு
கயமையினாற் பிணிப்புண்டு கலங்கும் உள்ளம்
விரவிடும்பேர் இருள்தன்னை விரட்ட வல்ல
**வெளிச்சத்தைப் பரப்புமொரு விளக்கு நல்லோர்**
**பரவிடுஞ்செந் தமிழ்மறையே** படித்துப் பார்த்துப்
பகருங்கள் இதற்குநிகர் பாரில் உண்டோ?

அறந்தழைக்க அரசிருத்தி அழகு செய்ய
அன்பென்னும் அணிபூட்டி அருளை நாடிச்
சிறந்தமணி முடியாகச் சிரத்திற் சூட்டிச்
செல்வம்நற் கல்வியுடன் செழித்துப் பொங்க
மறந்தவிர்த்து நல்வாழ்வு மக்கள் வாழ
மண்ணுலகை விண்ணுலகாய் மாற்றிக் காட்டிப்
பிறந்தபயன் இங்குபெறப் பிறர்சொல் லாத
**பெருநெறியைத் தமிழ்மறைதான் பேசும் அன்றோ!**

---

இ.உ.—3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.5 உலகத்து மக்களே வாரீர்!

உலகத்து மக்களே வாரீர்—இந்த
உயர்வு நிறைந்த தமிழ்மறையைப் பாரீர்!
சிலசொல்லால் உங்களின் சிந்தை—நன்கு
சிறக்கப் பெரிதும் புரிந்திடும் விந்தை

அன்பின் வடிவத்தைக் காட்டும்—உள்ளம்
அலைக்கும் அறியாமைப் பேயினை ஓட்டும்
என்றுமுங்கள் சோம்பலைப் போக்கும்—இடர்
எத்தனை தோன்றினும் கைகொடுத்துக் காக்கும்.
(உலகத்)

வாய்ப்புக் கிடைக்காமல் வாடி—உய்யும்
வழியினை உள்ளங் கொதித்திடத் தேடி
ஓய்வின்றி மாய்வோரைத் தேற்றும்—துயர்
ஒழித்து மனத்தில் உறுதியை ஏற்றும். (உலகத்)

எளியோர் தவிப்பினை மாற்றும்—யாரும்
எண்ணிய பெற்றிட நல்வழி சாற்றும்
ஒளிபெற நன்னெறி சொல்லும்—அறம்
உரைப்பதில் ஏனைய நூல்களை வெல்லும். (உலகத்)

உள்ளத் தினைக்கொள்ளை கொள்ளும்—என்றும்
ஊழினை வெல்லும் வழியினை விள்ளும்
கள்ளங் கபடங்கள் போக்கும்—உள்ளங்
கலக்கிடுந் தன்னல மாசினை நீக்கும். (உலகத்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கட் குலத்தினை ஒன்றாய்—மிக
மதித்துப் பொதுநீதி கூறிடும் நன்றாய்
திக்கற் றவர்பெருந் தேட்டம்—மனத்
திட்பம் பெறஇதிற் கொள்ளுவர் நாட்டம். (உலகத்)

செந்தமிழ் ஆர்வத்தை ஊட்டும்—பண்புச்
சிகரத்தி லேற்றி மதியினைத் தீட்டும்
சிந்தனை பொங்கிடச் செய்யும்—அன்பு
செழிக்க உளத்தில் அமுதினைப் பெய்யும். (உலகத்)

துன்பம் வரும்பொழுது நாளும்—நீங்கள்
துயரப் படாமற் சிரிப்புடன் வாழும்
இன்ப வழியினைக் காட்டும்—இது
எழுச்சியைத் தந்து புகழினை நாட்டும். (உலகத்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.6 வெற்றிக்கு வழி

''எப்படி நாம் வாழ்வோம்? எமக்கிங்கு வாழ்வுண்டோ!
இப்படியில் ஏன்பிறந்தோம்'' என்று கலங்கிமிகச்
சோர்வடைந் துள்ளம் சுழன்றிங்கு வாழ்ந்திட
ஓர்வழியைத் தேடியே ஓயா தலைகின்ற
ஏழ்மையின் தோழர்காள்! ஏனிந்தப் பேரலைச்சல்?

தாழ்வகன்று வாழத் தரணியிலே வாய்ப்புண்டு.
மந்திரத்தால் எவ்விடத்தும் மாங்காய் விழுவதில்லை;
தந்திரத்தால் எங்கும் தழைக்க முடியாது.
சூழ்ந்து பிறரைச் சுரண்டி வளம்பெறுவோர்
வீழ்ச்சியினை முத்தமிட்டு வேரற்றுப் போகின்றார்.

காக்காய் பிடித்துமற்பர் காலைப் பிடித்துமிங்கு
ஆக்கம் பெறமுயன்றால் ஆல்போற் பழிநிலைக்கும்.
எந்தச் சிறப்பினைநீர் எய்த விரும்பிடினும்
இந்த உலகில் எளிதினிலே பெற்றிடற்கு
எல்லோரும் போற்றுகின்ற ஏற்றமுடை வள்ளுவனார்
நல்ல வழியை நயம்பொலியச் சொல்கின்றார்.
அவ்வழியை நீங்கள் அறிய உரைக்கின்றேன்.
செவ்வழியோ அன்றோ செயற்படுத்திக் கண்டிடுவீர்.

எண்ணுகின்ற போதெல்லாம்
ஏற்றமுற எண்ணவேண்டும்.
எண்ணுகின்ற ஒன்றினை எய்திடவே எண்ணினால்
மீண்டுமதை எண்ணிஎண்ணி
மிக்கவுளத் திண்மையினைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூண்டுகொளல் வேண்டும்பின் போக்கரிய துன்பங்கள்
வந்தாலும் உள்ளம் வதங்கிக் கலங்காமல்
நந்தாத செல்வ நகைப்பினாற் போக்கியே
மோதுகின்ற பந்தைப்போல்
முனைந்தெழுந் தூக்கத்தைப்
போதும் அளவுக்குப் பொங்கிடச் செய்தே
**எடுத்த கருமம் இனிதுநிறை வேற**
**அடுத்து முயல்வதே அந்தவழி. இன்றிதனை**
**எல்லோர்க்கும் வெற்றிதரும் இன்ப வழியென்று**
**நல்லோர்கள் போற்றுகின்றார் நன்கு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# நூல்கள்

## 5.1 தொல்காப்பியம்

ஓங்குபுகழ்த் தொல்காப்பி யரென்று சான்றோர்
உவந்துவந்து போற்றுகின்ற புலவர் கோமான்
தேங்குபுகழ் இலக்கணமாந் திட்ப நுட்பஞ்
செறிந்திலங்கு **தொல்காப்பி யத்தைச் செய்தார்.**

இன்றிருக்கும் தமிழ்நூல்கள் யாவற் றுள்ளும்
இணையற்ற பழமைகொண்ட திருநூல் ஆகித்
தொன்றுதொட்டுப் புலவர்கள் தொடர்ந்து போற்றத்
தூயதமிழ்த் திறம்விளக்கும் **முதனூல் இஃதே.**

எழுத்துக்குஞ் சொல்லுக்கும் இந்தச் சொற்கள்
எடுத்துரைக்கும் பொருளுக்கும் இலக்க ணத்தை
விழுப்பஞ்சேர் முறையினிலே வெவ்வே றாக
**விளக்கிடுமிந் நூற்கிணைநூல் வேறொன் றில்லை.**

தமிழ்மொழிக்கு மட்டுமன்றித் தமிழர் வாழ்வு
தனக்கும்பேர் இலக்கணத்தைத் தந்த இந்நூல்
இமிழ்கடல்சூழ் உலகினிலே எந்த நூலும்
இயம்பாத **பலபொருளை இணைத்துக் கூறும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகப்பொருளாம் காதலரின் **அன்பு வாழ்வும்**
அதனோடு புறப்பொருளாம் **வீர வாழ்வும்**
மிகப்பொருந்த விரித்துரைத்து மேலும் **இன்ப**
**வீடடையும் வழியினையும்** விளக்கிக் காட்டும்.

தொன்மைமிகு தமிழினத்தின் குறிக்கோள் சால்பு
தூயகொள்கை கலைச்சிறப்புத் துலங்கும் வன்மை
நன்மைமிகு நாகரிகம் நற்பண் பெல்லாம்
நானிலத்தோர்க் குரைக்க**இந்நூல் ஒன்றே போதும்.**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.2 சங்க நூல்கள்

**சங்க நூல்கள்** என்றுமக்கள்
சாற்றும் சிறந்த பாடல்கள்
எங்கள் இனத்தின் பழஞ்சிறப்பை
எவர்க்கும் காட்டும் **ஆடிகளாம்.**

முன்னர் வாழ்ந்த வள்ளல்கள்,
முதன்மை நிறைந்த புலவர்கள்,
மன்னும் இசைகொள் மன்னரென்போர்
மாட்சி பரப்பும் **சுடர்மணிகள்.**

தமிழர் **வீரச் செயல்களையும்,**
தணியாக் **காதல் வாழ்வினையும்**
அமிழ்து போலச் சுவைக்கின்ற
அழகுத் தமிழில் இவைகூறும்.

ஒப்பில் பத்துப் பாட்டென்றும்
ஓங்கும் எட்டுத் தொகையென்றும்
செப்பும் நூல்கள் பதினெட்டும்
சேர்ந்த தொகுதி **மேற்கணக்காம்.**

இந்தத் தொகுதி போறபத்தும்
எட்டுஞ் சேர்ந்த தொகுதிக்கு
விந்தை யாய்க்**கீழ்க் கணக்கென்று**
வேறு பெயரை இட்டார்கள்.

படிக்கப் படிக்கச் சுவைக்கின்ற
பகரப் பகர இனிக்கின்ற
முடிவில் நயத்தைக் கொண்டஇவை
**மூவாச் சாவா நிறைநூல்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.3 சிலப்பதிகாரம்

இலங்கு புகழைக் கொண்ட புலவர்
இளங்கோ அடிகள் என்பவர்
சிலம்பு சேர்ந்த பெயரைப் பூண்ட
சிறந்த நூலை ஆக்கினார்.

இன்றும் மக்கள் எங்கும் விழாக்கள்
எடுத்துப் போற்றுங் கண்ணகி
என்ற பெண்ணின் வாழ்வை இந்நூல்
இன்பம் ததும்பக் கூறிடும்.

அறத்துக் கரசி அன்புக் கரசி
அழகுக் கரசி நற்குணச்
சிறப்புக் கரசி தெய்வக் கற்புத்
திண்மைக் கரசி கண்ணகி.

நெஞ்சை அள்ளும் இந்நூல் எங்கள்
நெடிய பழைமைச் சீரினை,
விஞ்சு தமிழின் கலைகள் பொலிந்த
விதத்தை நன்கு காட்டிடும்.

அரச நீதி பிழைத்தோர் விரைவில்
அழிந்து போவார் என்பதை
முரசு அறைந்தே இந்த உலகம்
முழுதும் அறியச் சாற்றிடும்.

செய்த வினையாற் சேர்த்த பலன்கள்
தேடி அடையும் என்பதைத்
தெய்வக் கற்பின் அரசி கதையால்
தெளிய விளக்கிச் செப்பிடும்.

ஆடற் கலையை மக்கள் வாழ்வின்
அமைப்பைக் காட்டும் ஓவியம்
பாடற் பண்பால் படிப்போர் உளத்தில்
பாகாய் இனிக்குங் காவியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# வாழ்வு தந்தோர்

## 6.1 வாழ்வு தந்த வள்ளல்

இந்த உலகில் மக்கட் குலத்தின்
இன்ப வாழ்வுக் கென்று
முந்தி வகுத்த நெறிகள் போட்டி
மூட்டி உலகை வாட்டச்
சிந்தை மயங்கி நொந்த மக்கள்
செம்மை ஓர்ந்து சிறக்க
வந்து தோன்றி **வாழ்வு தந்த**
**வள்ளல் காந்தி வாழ்க!**

* * *

படைப்பலம் கொண்டு பாரினிற் கொடுமை
பற்பல விளைப்பவர் தம்மை
நடைப்பிணம் போல ஆக்கிட வல்ல
நயம்மிகு படையெனும் வாய்மை
கடைப்பிடித் தினிய அறவழி நின்று
கருதிடும் உரிமையைப் பெறுதற்கு
இடைந்தவர்க் கேற்ற **சத்தியாக் கிரகம்**
**எனும்நெறி வகுத்தவர் வாழ்க!**

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வு தாழ்வுகள் போற்றுங் குலவெறி
ஒப்பில் நிறமத வெறிகளும்
கயமை நிறைந்தவர் கருதிப் போற்றிடும்
கணக்கில் வெறிகளும் நீங்கிட
மயக்கந் தீர்ந்தினி மனித குலத்தினர்
மாண்பு பெருக்கிடுஞ் சமத்துவம்
நயந்து வாழ்ந்திட அகிம்சை நெறியினை
நாட்டி வைத்தவர் வாழ்கவே.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.2 நாவலர் தாள் இறைஞ்சுதும்

பூமணக்கும் பொழில்மணக்கும்
புனிதநல்லூர் தான்மணக்கப்
பாமணக்க உரைமணக்கப் பகர்சைவ நெறிமணக்கத்
தேமணக்குந் தமிழணங்கு செய்தபெருந் தவப்பயனால்
**நாமணக்க அவதரித்த நாவலர்தாள் இறைஞ்சுதுமே.**

தொல்லறங்கள் சிறந்தோங்கத்
தூயதொண்டு செய்யவெண்ணி
இல்லறத்தை விரும்பாமல் இடர்மிக்க துறவென்னும்
வல்லறத்தை மேற்கொண்டு வாழ்வினையேஉவந்தளித்துப்
பல்லறங்கள் பொலிவித்த **பண்பினனைப் போற்றுதுமே.**

பன்னெறிகள் வளர்கின்ற பாருலகில் தமிழர்தம்
தொன்னெறியாய் மிளிர்ந்தசைவம்
தோற்றமிழந்து இங்கு வந்த
பின்னெறிகள் சிலவற்றாற் பீடழிய மீண்டுமதை
முன்னெறியாய் நிலைநிறுத்த **முயன்றோனை வாழ்த்துதுமே.**

தமிழ்க்கடலின் நிலைகண்டு தன்னொப்பா ரின்றியுயர்ந்து
அமிழ்தனைய உரைநடையை அருமையுற வளப்படுத்தி
இமிழ்கடலும் கறையானும் ஏக்கமுறத் தமிழ்நூல்பொற்
சிமிழ்நிகர்க்கப் பதிப்பித்த **திறலோனைப் பரவுதுமே.**

பூச்சிந்தும் நறுந்தேன்போற் பொருளோடுசொல்லணிசேர்
பாச்சிந்தும் புலவர்கள் பாடுஞ்சீர் படைத்தோங்கிக்
காச்சிந்தும் மலர்போலக் கற்றோரும் மற்றோரும்
நாச்சிந்தும் இசைகொண்ட நாவலரை வணங்குதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.3 ஒருவர் உண்டோ!

வள்ளுவரின் பின்னெங்கள் தமிழ்த்தாய் பெற்று
வளர்த்தபெரும் புலவர்கள் பலரென் றாலும்,
எள்ளளவு முற்போக்கும் இன்றி ஏங்கி
இழிவுற்ற எம்மக்கள் உளத்தைப் பாட்டாற்
கொள்ளைகொண் டே ஒளியேற்றி உணர்ச்சி ஊட்டிக்
கொடுமைபல போக்குதற்கு வழியுங் காட்டி
விள்ளுதற்கு முடியாத புகழைக் கொண்ட
**வித்தகராம் பாரதிபோல் ஒருவர் உண்டோ?**

தாய்மொழியைத் தவிக்கவிட்டுத் தமிழர் வாழ்ந்த
தகுதிகெட்ட வாழ்வுகண்டு துடித்து நைந்தும்,
பேய்களினைப் போலறிவை இழந்து மக்கள்
பிறப்பாலே தாழ்வுயர்வு போற்றிக் கெட்டுத்
தேய்வதனைப் பார்த்துமிகப் பதைத்து நொந்தும்
தெளிவில்லா மதியினரைத் திருத்த எண்ணி
வாய்மையினை அஞ்சாமல் இடித்துக் கூறும்
**வளம்மிக்க இன்கவிகள் பாடித் தந்தார்.**

*　　　*　　　*

துடிப்பு நிறைந்து சுவைகள் துள்ளும்
துங்கக் கவியின் பாடல் களினைப்
படித்து விட்டால் ஒருவர் படிக்கப்
பக்கம் நின்று கேட்டு விட்டால்
இடித்து மனத்தைத் தேற்றும், துளைக்கும்,
ஈர்க்கும், உருக்கும், உயர்த்தும், புதுக்கும்,
அடிக்கும், அணைக்கும் **அவற்றின் காந்தம்**
**அவனி காணா விந்தை அன்றோ!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுத் திறத்தால் இந்தச் சுழலும்
பாரைத் திருத்த எண்ணி முயன்று
வாட்டும் அச்சம் பொறாமை சோம்பல்
வறுமை மடமை மூடக் கொள்கை
ஓட்டும் பணியில் வெற்றி கண்டே
ஒப்பில் புகழ்சேர் **அமர கவியாய்**
நாட்டு மக்கள் உளத்தில் நிறைந்து
**நாளும் இலங்கும் நல்லோன் வாழ்க!**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.4 அருள் பரப்பும் கதிர்

தெள்ளமுதின் சுவைமலியத் தீந்தமிழின்
சுவையூட்டும் தெய்வச் செல்வன்
தள்ளரிய தமிழ்த்தலைமை தாங்கியநற்
செய்தியுளந் தளிர்ப்பக் கேட்டே
உள்ளமதில் மகிழ்வூற உணர்ச்சியெழின்
நயத்திலே உயர்ந்த பாக்கள்
பள்ளமதில் விழும்புனல்போற் பாயுமெனும்
பொருள்மொழியின் பண்பு கண்டேன்.

கண்டடியேன் அகத்தெழுந்த கவிகளினைச்
சேர்த்தெழுதிக் கலங்கி வாடி
**அண்டினோரை அணைத்தருளும்**
**அடிகளார்வி புலானந்தர்க்** கனுப்ப எண்ணி
எண்ணரிய முயற்சிசெய்தேன் என்னகத்தைப்
பேரின்பம் எடுத்தே யுண்ட
பண்பதனால் அவைமறையப் பணிவாக
வாழ்த்தினையே பகர்ந்தேன் மாதோ.

அலைநிறைந்த கடலுலகில் அருளொளியைப்
பரப்புமருங் **கதிரே வாழி!**
கலைநிறைந்த நாட்டவருங் கருத்திருத்தும்
கலைஞானக் **கடலே வாழி!**
விலைநிறைந்த நயம்மிக்க விருந்தனைய
உரைபொழியும் **விசும்பே வாழி!**
மலைநிறைந்த இலங்கையெனும் மணிநாட்டை
மகிழ்விக்கும் **மதியே வாழி!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.5 பார்புகழ் திறலுக்குரியார்

பகுத்தறிவைச் சிந்தனையைப் பாழாக்கி **முனிவரருள்**
பழைய நூல்கள்
வகுத்ததெனக் கண்மூடிப் பழக்கத்தை வழக்கத்தை
வாழ்வில் நன்கு
புகுத்தியெத்தர் அடக்கவுளம் புண்ணாகி
வருந்திநொந்து பொருமிக் கண்ணீர்
உகுத்தவரைக் காத்தவரை உலகத்தோர் **பெரியாரென்**
**றுரைப்பர் அன்றோ!**

* * *

முன்னரும் காக்க முயன்றனர் சிலபேர்
முழுப்பயன் கிடைத்திட வில்லை
அன்னவர் வழியில் அடிவையா தெவரும்
அஞ்சிடும் புதுவழி சென்று
தென்னவர் மகிழத் திராவிடர் கழகம்
திடுக்கிடும் பணிசெய நிறுவிப்
**பன்னரும் புரட்சி பரப்பின பெரியார்**
**பார்புகழ் திறலினுக் குரியார்.**

* * *

**பெரியாரை ஈவேராப் பெயரைப் பூண்ட**
பெம்மானைப் பகுத்தறிவுப் புரட்சிப் போர்கள்
அரியபல கிளர்ச்சிகளை ஆய்ந்து செய்தும்
அறியாமை வேற்றுமைகள் அகற்றி வாழ
உரியவழி புரட்சிவழி உணர்ச்சி உந்த
உரிமைநாட்டும் இயக்கவழி உணர்வீர் என்று
விரித்துரைத்தும் மனம்மாற்றி வெற்றி கண்ட
வித்தகரை நாடுபோற்றல் விந்தை அன்றே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

# 6.6 தவப் புதல்வன்

தமிழ்மக்கள் நிலைகெட்டுத் தடுமாறித் தவித்தகாலை
அமிழ்தனைய உரைகளினால் அவருள்ளத் திருள்நீக்கி
விதிதன்னைப் பயன்படுத்தி விளக்கமிலா மக்களினைச்
சதியினாலே அடிமையாக்கிச் சமயத்தின் பேரினாலே
சுரண்டிநன்கு பிழைத்தபெருஞ்
சூழ்ச்சியருன் பெயர்கேட்டு
மிரண்டோட உண்மைகளை மிகவிளக்கி உரமேற்றி
அவர்களுக்கும் புதுவாழ்வை அளித்துயர்ந்த **தமிழினத்தின்
தவப்புதல்வன் பேரறிஞன் தலையமைச்சர் அண்ணாவே!**

வள்ளுவரின் தமிழ்மறையை வழிகாட்டும் மறையாகக்
கொள்ளுதற்கு வழிவகுத்துக் குறைவின்றித் தமிழ்நாட்டில்
பல்கலைஆய் கழகங்கள் பலவழியில் அதன்திறனை
எல்லோர்க்கும் ஆய்ந்துரைக்க
இசைந்தபணி செய்துயர்ந்து
சொற்பொழிவால் பொன்எழுத்தால்
சொல்லரிய நாடகத்தால்
**பொற்புமிகு புரட்சிதன்னைப் புவியினிலே நிலைநாட்டி
அன்போங்கத தமிழ்மக்கள் அண்ணாவென் றழைக்கநாளும்
நன்றுசெய்து புகழ்கொண்ட நாயகனாம் அண்ணாவே!**



7132 ட.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திராவிடர்கள் முன்னேறித் திகழ்ந்திட நற் கழகம் அமைத்
திராப்பகல்கள் ஓயாமல் இலங்குபணி **ஆற்றினையே!**

திமுகவென்ற மூன்றெழுத்துத்
திசையெல்லாம் நிலைத்துநிற்கச்
சமுதாயச் சீர்திருத்தம் தழைத்தோங்கச் **செய்தனையே!**

குருட்டாட்டம் ஆடியாடிக் குழிக்குள்ளே விழுந்தோரை
**மருள்நீக்கி மனிதராக்கும் மாயவித்தை புரிந்தனையே!**

எண்ணத்தில் அரும்புரட்சி எழுத்தினிலே பெரும்புரட்சி
வண்ணச்சொல் செயல்களிலே **வளர்புரட்சி புகுத்தினையே!**

**நிலவிவந்த சென்னையெனும் நெஞ்சுதாங்காப் பெயரைநீக்கி**
**இலங்குதமிழ் நாடென்ற இனியபெயர் சூட்டினையே!**

தமிழறிந்தோன் முதலமைச்சன்
தமிழ்நாட்டுக் கெனும்பெருமை
இமிழ்கடல்சூழ் உலகமக்கள் எடுத்துரைக்க **ஆண்டனையே!**

நிதிகல்வி பிறப்போடு நியதிகுலம் சமயங்கள்
விதைத்துவைத்த உயர்வுதாழ்வு
**வேற்றுமைகள் ஒழித்தனையே!**

பரந்தோங்கும் இந்தியாவின் பாராளும் மன்றத்தில்
நிரந்தினிது சொல்லியெங்கும் **நிலவுபுகழ் ஈட்டினையே!**

உலகில்வாழ் தமிழர்தம் உளமெல்லாம் இடையறாது
நிலவிநின்றே ஊக்கமூட்டி **நிலைத்த வாழ்வை எய்தினையே!**

**நிலைகுலைந்தும் அரசிழந்தும் நின்றவெங்கள் தமிழ்த்தாயைத்**
**தலைநிமிர்ந்து வாழவைத்துத் தனிச்சிறப்புப் பெற்றனையே!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவாங்கு,

எண்ணம் தன்னில் எழுத்தில் அடங்காத்
தொண்டினை யாற்றிப் பண்டைப் பெருமையும்
புதுமைச் சிறப்பும் பொருந்தக் கொண்டு
**கடமை கண்ணியம் கட்டுப் பாட்டினை**
மடமை சோம்பல் மயக்கம் பிறழ்வு
தூக்கம் என்பன நீக்கும் மருந்தென்று
ஊக்கம் பெருக்கும் உயர்வழி காட்டிச்
சமவாழ் வுஞ்சம தருமமும் நிலைக்கநீ
**வகுத்த கொள்கை வழிவழி வாழ்கவே.**

---

156838

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.7 தமிழ் மலை

மூவேந்தர் மறைந்தபின்னர்
முத்தமிழும் சீர்குலைந்து
முன்போற் போற்றப்
பூவேந்தர் எவருமின்றிப்
பொலிவிழக்கப் பொய்யுடனே
புரட்டும் சேர்த்து
நாவேந்தர் எனநடித்தோர்
நாணமின்றித் தமிழ்த்தாயை
நசித்த போழ்தில்
**பாவேந்தர் தோன்றித்தம் பாட்டாலே புரட்சிசெய்து**
**பாது காத்தார்.**

தமிழெங்கள் உயிராகும் தாழ்ந்துவிட்ட தமிழகமே
தவிப்பை நீக்கு
உமிதன்னைக் குற்றிக்கை
ஓய்ந்தென்றும் பயன்பெறாமல்
உழலும் வாழ்வில்
அமிழ்ந்திடாதே உழைத்துச்சேர்த்
தனைவர்க்கும் பகிர்ந்துண்ணும்
**அன்பு வாழ்வே**
இமிழ்கடல்சூழ் உலகினிலே
இனிநிலைக்க வேண்டுமென்றார்
**எம்பா வேந்தர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லுலக மக்களெல்லாம்
ஒன்றேயென் றெண்ணுகின்ற
தூய **உள்ளம்**
பல்லுயிரும் இனிதுவாழப் பாடுபடும் சமஉடைமை
படிந்த **உள்ளம்**
சொல்லுவதைச் செய்யுமுள்ளம்
சூழ்ச்சிகளை முறியடிக்கும் சோர்வில் **உள்ளம்**
வெல்லுகின்ற **துணிவுள்ளம்** வேண்டுமெ
மக்கு என்றவர்பா
**வேந்தர் அன்றோ!**

நான்குமக்கள் செல்வராக நாட்டில்நா லாயிரம்பேர்
நலிந்து தேய்ந்து
பான்மைகெட்டு வறுமையினில்
படிந்துழலல் நீதியாமோ
பகரீர் எங்கும்
வான்மழைபோல் யாவர்க்கும்
வாய்ப்பளிக்கும் **பொதுவுடைமை**
**வாழ்வுக் கொள்கை**
**தோன்றியோங்க விதிசெய்வோம்**
**துயர்துடைப்போம் வம்மினென்ற**
**தோழர் வாழ்க.**

நிலைத்துநின்று பகுத்தறிவை நீதியினை மக்கள்தம்
நிறைந்த வாழ்வைக்
குலைத்துவந்த முழுமூடக்
கொள்கைகளைப் பெருங்கொடுமைக்
கும்பல் தன்னைத்
தொலைத்துவிட வாளெடடா
தூங்காதே என்றுபாடித்
துவண்ட மக்கள்
மலைப்புநீக்கி வெற்றிகண்டு மன்னுபுகழ்ப் **பாவேந்தர்**
**மலைபோல் நின்றார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அந்தண்மை நிறைந்துயர்ந்த அரும்புலமைப் பாவேந்தர்**
அழகு சொட்டத்
தந்தபாக்கள் படித்திடுவோர்
தளர்ச்சி நீக்கிச்
**செந்தமிழை வண்டமிழைச்**
**செழுந்தமிழைத் தீந்தமிழைச்**
சிந்தை ஈர்க்கும்
**பைந்தமிழைச்** சுவைத்திடுவர்;
பகர்வரிய பொங்குதமிழ்ப்
பற்றுங் கொள்வர்.

———

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.8 காக்க வந்த தெய்வம்

**எங்கள் அன்னை இந்திராவை**
இருவர் சுட்டுக் கொன்றதையும்
தங்க மேனி முழுவதையும்
தகிக்கும் குண்டு துளைத்ததையும்
இங்கு கேட்ட எல்லோரும்
இதயம் வெந்து வெகுண்டுமிகப்
பொங்கிக் குமுறி அழுதரற்றிப்
பொருமிப் புரண்டு துடிக்கின்றார்.

என்னே! என்னே! என்செய்வோம்
ஏனிக் கொடுமை நடந்ததெனப்
பன்னிப் பன்னித் துயர்க்கடலிற்
படிந்து மூழ்கி உயிர்சோர்ந்தே
அன்னை மாண்ட பெருந்துயரை
ஆற்ற, எவரும் துணையின்றி,
என்றும் நீக்க முடியாத
இடர்ப்பட் டேங்கி மாழ்கின்றார்.

பிறந்தோர் இறத்தல் இவ்வுலகின்
பிறழா நியதி என்றாலும்
இறப்பு விபத்தால் நிகழ்ந்ததெனின்
இனத்தோர் துன்பம் பெரிதாகும்.
திறல்சேர் சூழ்ச்சி செய்தெண்ணித்
திட்டம் வகுத்துச் செய்கொலையால்
**உறவு கொண்டோர் உறுதுயரம்**
**உரைத்துக் காட்ட ஒண்ணாதே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணை இமைகள் கெடுப்பதிலும்
காக்கும் படைகள் பழிவாங்க
எண்ணி மக்கள் தம்மைச்சுட்
டெரிக்கும் பழிசேர் கொடுமையிலும்
அண்டி நின்று காப்பதையே
அரிய புனிதப் பணியாகக்
கொண்டோர் சுட்டுக் கொன்றழித்த
**கொடுமை கொடிது கொடிதன்றோ!**

பாம்பின் வாயில் தேரையெனப்
பதகர் கையில் அகப்பட்டுத்
தேம்பி அழுது தமிழ்மக்கள்
சிந்தும் கண்ணீர் துடைத்தணைத்தே
ஓம்பித் தேற்றி உய்யவழி
**ஒன்று வகுக்க உழைத்தஅன்னை**
சாம்பி நாங்கள் துடித்தலறத்
தவிக்க விட்டுப் போய்விட்டார்.

* * *

இந்திய நாடு பெற்ற
எழில்மிகு குழந்தை என்னும்
இந்திரா நாட்டின் ஆட்சி
இயக்கிடும் தலைமை தாங்கி,
இந்தியர் இதயத் துள்ளே
இமயமாய் ஓங்கி நின்று
தந்தையும் தாயும் ஆகித்
**தனிப்பெரும் தெய்வம் ஆனார்**

இந்திய நாட்டின் பண்பை
இவ்வுல கெங்கும் நாட்டிச்
சிந்தையும் செயலும் சொல்லும்
சேர்ந்திட உழைத்து மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திய கண்ணீர் போக்கிச்
சிறுமைகள் அகற்றி எங்கும்
அந்தமில் புகழை ஈட்டி
**அரசியாய்ப் பொலிந்து நின்றார்.**

படையினால் அணுவின் குண்டால்
பணத்தினால் சூழ்ச்சி தன்னால்
தடையிலா அதிகா ரத்தைத்
தரணியில் நுழைக்கும் நாட்டோர்
அடைந்திட முடியா தேங்கும்
**அளப்பரும் நற்செல் வாக்கை**
இடைந்தவர் இடுக்கண் நீக்கும்
இயல்பினால் **எங்கும் பெற்றார்.**

* * *

**இந்தியாவின் ஈடில்லா இதயமென உலகத்தோர்**
**இயம்பும் அன்னை**
**இந்திராவைப்** பெருஞ்சதியால் இழந்ததாலே **உலகமக்கள்**
இரங்கிக் கண்ணீர்
சிந்துகின்றார். இறைமைஅறம் சீலமுலக அமைதிநீதி
செங்கோல் வாய்மை
எந்தநாட்டில் இனியெம்மை எத்தலைவர் காப்பாரென்
றேங்கும் அந்தோ!

வறுமையினால் அடிமைகளாய்
வாட்டமுற்றுப் பட்டினியால்
வயிறு காய்ந்து
பொறுமையினை இழந்தலைந்த **பொதுமக்கள் தம்வாழ்வு**
**பொலியும் வண்ணம்**
உறுதியுடன் உழைத்தோங்க உயர்ந்தபல திட்டங்கள்
உலகம் போற்றச்
சிறுமதியர் எதிர்த்திடவும் செயற்படுத்தி நல்லாட்சி
செய்த தாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலஇனங்கள் பலமதங்கள் பலகட்சி வேற்றுமைகள்
பரக்கக் கொண்டு
குலவிநிற்கும் மிகப்பெரிய குடியரசாம் பாரதத்தின்
கொற்றம் என்றும்
இலங்கிநிற்கச் செய்வதற்கே இரவுபகல் ஓய்வின்றி
இடர்கள் கண்டு
கலங்காமல சோராமல் காசினியோர் வியப்பெய்தக்
கடமை செய்தாய்.

பொருள்வளத்தால் தொழில்வளத்தால்
பொலிந்துயர்ந்த நாடுகளைப்
போன்று நாளும்
பெருவளங்கள் மிக்கோங்கிப்
பிறங்கியென்றும் இந்தியாவும்
பெருமை ஈட்ட
மருள்நீங்கி அறிவுபெற்று மக்களுண்மைச் சமவாழ்வு
மகிழ்ந்து வாழ
அருள்வளத்தின் அடிப்படையில் அசையாமல் அஞ்சாமல்
ஆட்சி செய்தாய்.

அணிசேரா நாடுகளின் அருமைமிகு தலைவியாகி
அவற்றைக் காக்கத்
துணிவுடனே செயற்பட்டுத் துன்பங்கள் தொல்லைகளைத்
துடைத்துப் போக்கிக்
கணிப்பரிய பணிசெய்து கண்கெடுக்கும் முதலாண்மைக்
கயமைக் கொள்கைத்
திணிப்புக்குத் தடைபோட்டுச் சிறந்தோங்க வழிவகுத்த
திறமை மிக்கோய்!

* * *

கண்கண்ட தெய்வமெனும் காந்தியுடன் பழகியதால்
பண்பட்ட கொள்கைகள் பயின்றுதந்தை நேருவெனும்
விண்முட்டும் புகழுடையான் விடுத்தபல கடிதங்கள்
எண்டிசையும் போற்றக்கற் றெழுச்சிபெற்ற பெருந்தலைவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவினைகள் அகற்றியென்றும் பெயராத ஒற்றுமையைப்
பெரிதென்று கொண்டுமக்கள் பிரித்தழிக்கும் சதிகளினை
எரித்தழிக்க வேண்டுமென இடித்துரைத்துப் போராடி
**அரியவுயிர் கொடுத்தென்றும் அழிவில்லாப் புகழ்பெற்றாய்.**

இந்தியாவின் ஒற்றுமைக்குன்
இரத்தத்தைச் சிந்தியோங்கும்
**இந்திராவே!** உலகத்தோர் இதயத்தில் **ஒளிர்சுடரே!**
சிந்தைவாடி உரிமையின்றிச் சீரழியும் மக்களுக்குச்
சொந்தத்தாய் போலிரங்கித் துணைசெய்யும் **அருட்கடலே!**

வரலாற்று **நாயகியே!** வளர்ந்துவரும் நாடுகளின்
அரணாக விளங்கிநின்ற அருந்தவத்தின் **திருவுருவே!**
முரண்கொள்வல் அரசுகளை மோதாமல் தடுத்தமைதி
பரந்துலகில் நிலைநிற்கப் பாடுபட்ட **மாமணியே!**

அடுத்தடுத்துக் கொல்கருவி ஆக்குகின்ற நாடுகளைத்
தடுத்துலகைக் காத்தற்குத் தளராமல் எச்சரிக்கை
விடுத்தாய்உன் தனிவீரம் வேறெவர்க்கும் பிறக்குமோயாம்
திடுக்கிடாமற் காக்கவந்த தெய்வந்தான் நீயம்மா.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# பேரம்பலப் புலவர்

## 7.1 பதிகம்

மண்ணாட்டில் பெருக்கியவுன்
மாண்புடைநற் றமிழமுது
விண்ணாட்டில் சென்றுபுக
விண்ணவர்தாம் நன்கருந்தி
உண்ணாரின் னமுதைவெறுத்
துன்றமிழ முதைவேண்ட
எண்ணாமல் எமைவிட்டோ ஏகினைபே **ரம்பலமே!**

எந்நாட்டும் முன்னாட்டு மெழில்மிக்க நாடெங்கள்
செந்நெலொடு கரும்புபிற
செறிந்திலங்கு வேலணையென்
றிந்நாட்டுப் புகழ்பரப்பி இலங்கியநீ யின்றெங்கே
இந்நாட்டை விடுத்தேகி இருந்தனை**பே ரம்பலமே!**

அருந்தவஞ்செய் துனைப்பெற்ற
அமுதனைய தமிழ்த்தாயிங்கு
இருந்தலற நீசென்றே இருக்குமிடம் அறியேம்யாம்
பெருந்தவத்தால் பெருமையுடன்
பெற்றெடுத்த வுனைப்பிரிந்தாள்
இருந்தவமே வருந்தலுனக் கிசையோ**பே ரம்பலமே!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றிடில்நற் புகழுடனே தோன்றிடுக என்றேமுன்
சான்றோனாம் வள்ளுவர்தாம்
சாற்றியதற் குதாரணமாய்த்
தோன்றியொளிர் நற்செல்வத்
தோன்றலேதொன் னூல்கற்ற
**ஆன்றோனே அந்தணனே அருள்நிறைபே ரம்பலமே!**

சோதிடநூற் றுறைகடந்த
தொன்முதுசீர்ப் பாவலனே!
மேதினியில் வாழ்வதுபுல்
மேனீரைப் போன்றதென்றோ
யாதினியாம் செய்வமென யாமிரங்க எமைவிட்டே
ஆதிபரன் அலர்ப்பாதம் அடைந்தாய்**பே ரம்பலமே!**

காதார அமுதுபெறக் காரிகைபாற் றூதுசென்றோன்
நீதாநல் லமுதென்ன நில்லாது சென்றனையோ
வேதாவுந் திருமாலும் வேண்டுதல்செய் இபமுகத்து
நாதாவென் றவனடியோ நண்ணினை**பே ரம்பலமே!**

முத்தமிழை வளர்த்திடலால்
முனிவனென்றே புகழ்ந்துரைத்து
நித்தமும்யாம் நினைத்தொழுது
நின்புலமை நினைந்தேத்தக்
கைத்தலத்துக் கனியெனவே
கருதுசொற்குப் பொருள் விளக்கும்
**வித்தகனே! உத்தமனே! விமலாபே ரம்பலமே!**

கோலஞ்சேர் மாடநிரை குலவியொளிர் வண்ணைநகர்
ஆலஞ்சேர் மிடற்றானை
அணிகவியாற் றுதித்தவுனைக்
காலஞ்சா துயிர்கவரக் கருதுவனோ கருதானேல்
சூலஞ்சே ரிறையடியோ சூடினாய்**பே ரம்பலமே!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழ் நூற்கடலுண்ட திறனார்நற் **றிருமணியே!**
அந்தமில்நற் புகழுடைய **அன்புருவே அருமணியே!**
எந்தமர்தம் **கண்மணியே!** என்னிதயக் குருமணியே!
வந்தமிர்தம் தருவாயே வளர்**பேரம் பலமணியே!**

பேரம்ப லவன்பாதம் பேணிக்கோ ணமலையாம்
பேரம்ப லவனடியான் பெற்றெடுத்த பேறேநற்
பேரம்ப லம்புகழ்ந்து பேசுமுறை வெறுத்தோநீ
பேரம்ப லவனடியைச் சேர்ந்தாய்பே **ரம்பலமே!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.2 கையறு நிலை

விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகத்துக்
குன்றுதலை மணந்து குழூஉக் கடலுடுத்து
நன்னீ ரருவி பன்னூறு மன்னிக்
கொண்டல் கண்படும் தண்டலை கொண்டு
வளநீர்ப் பண்ணையும் வாவியும் மலிந்து
நிலத்துள பொருளும் நீள்கடற் பொருளும்
சாலைப் பொருளும் மலைதரு பொருளும்
அரியவும் பெரியவும் நெரிய வீண்டிப்
பொருகடன் ஞாலம் ஒருங்குடன் வரினும்
வழங்கத் தவாஅ வளத்த தென்றே
பூமலி கற்பகப் புத்தே ணாட்டொடு
**எண்டிசை போற்றும் ஈழநா டதனில்;**
அமரர் கோமான் அமர்ந்திடு நகரும்
கம்பர் புகழ்ந்த அம்புவி நகரும்
என்னே நாமிதற் கென்றழிந் திடவுயர்ந்து
கொலைவன் முதலை நிழல்பற் றியீர்க்கும்
குண்டுகண் ணகழி மண்டிச் சூழ்ந்த
**யாழொடு பெயரிய நீணக ரோர்பால்;**

செந்நெல் கன்னல் மன்னிய கழனியும்
திரளரைப் பண்ணை வீழில் தாழை
பச்சிலைக் கமுகு நெட்டிலை வாழை
காருட னோங்கிய சீருடைப் படைப்பையும்
ஓங்கிய கண்டலும் தேங்கிய நறையுடை
மாமலர்ப் பகன்றையும் தேமலர் அடம்பும்
எங்கும் நிறைந்து எழிலுட னிலங்கும்
பொங்குதிரை பொருத பொலிமணற் கரையும்
தெண்டிரை யுடுத்த தீம்புனல் மடந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டிக் கிடந்த மாண்புடைக் கேணியும்
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்
தொழில்பல செய்யும் பழிதீர் மக்கள்
மல்கி வதியும் பல்வேறி ருக்கையும்
**இன்ன பிறவும் மன்னிய வேலணை**
என்னும் ஊரில் மன்னரும் புகழினார்
கோணா மலையார் பேணிச் செய்த
அருந்தவப் பயனே! பொருவறு தோன்றால்!
**பேரம் பலம்போற்று பேரம் பலமே!**

தொல்லிசை பலவுறு நல்லிசைப் புலவோய்!
பொதிய மால்வரைப் பதிய னருளிய
அமிழ்தினு மினிக்குந் தமிழெனுஞ் சலதி
படிந்து பருகி இடித்து மின்னித்
தண்பணை யுடுத்த தமிழ்நா டெங்கும்
உன்னக் கேட்கப் பன்னத் தெவிட்டாச்
செந்தமிழ் பெய்த நந்தமிழ் மேகமே!
நவையில் காட்சிச் சுவையுடைச் சொல்லோய்!
நூன்முறை பயின்ற நுண்சொற் புலவர்
எண்ணிப் போற்றும் வண்ணைச் சிலேடை
வெண்பா வன்றியும் கண்ணுதல் பயந்த
கரிமுகச் செல்வன் திருவுட னிலங்க
இருமணி மாலை இயற்றிச் சூடிய
கற்றவர் வியக்கும் நற்றவப் புலவ!
ஊன்றுசான் மருங்கின் ஈன்றதன் பயன்கொடு
**பல்லோர்ப் புரந்த செல்லாச் செல்வ!**

நின்னை,
முற்ற வுணர்ந்த முதல்வ னென்கோ!
எங்குலம் விளக்கிய திங்க ளென்கோ!
பொங்குதிரை பொருத பொலிமணற் கரையும்
தெண்டிரை யுடுத்த தீம்புனல் மடந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம், யாழ்ப்பாணம்.

*நல்லோர்ப் புணர்ந்து அல்லோர்த் தணந்த
நல்லோ னென்கோ! வல்லோ னென்கோ!
வண்மையுந் திண்மையும் உண்மையுந் தண்மையுங்
கொண்டு விளங்கிய புண்ணிய னென்கோ!
அருளு மன்பும் ஆருயி ரோம்பும்
திருவும் நிறைந்த பெருமா னென்கோ!
மாயிரு விசும்பிற் பாயிருள் சீக்கும்
வெங்கதிர்ச் செல்வன் றன்செயல் போலெம்
மனவிரு ளிரித்த தினகர னென்கோ!
முத்தமிழ் வளர்த்த முனிவ னென்கோ!
இல்லோர் தமக்கு நல்பொருள் கொடுத்து
நல்வாழ் வளித்த செல்வ னென்கோ!
கோடைக் காலத்துக் கொழுநிழ லென்கோ!
எத்திறத் துயர்த்தினும் அத்திறத் துயர்ந்து
சொல்லச் செல்லாப் பல்லிசை படைத்தோய்!
நிலையா யாக்கையின் நிலையினை உணர்ந்து
மன்னா வுலகில் மன்னிய புகழ்பெற்
றுயர்ந்தோர் உலகம் நயந்துசென் றனையே!

அதனால்,
நீர்வார் கண்ணர் தொழுதுனை நினைந்து
வருந்தினர் ஊரோர். வருந்தினர் நண்பர்,
வருந்தினர் கேட்டோர், வருந்தினர் யாவரும்
நயனில் கூற்றின் பயனில் செயலைச்
சிறந்தவு வமையால் திறமுடன் விளக்கி
வைதனர், வாடினர், செய்வகை யறியார்
திருந்திய செந்நா விருங்கலைப் புலவர்;

---

* முற்பக்க இறுதியிலுள்ள இரண்டு அடிகளையும் நீக்கித் தொடர்ந்து படிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பி யயர்ந்து கலங்கிக் கையற்றுத்
துன்ப மென்பதன் தோற்றங் கண்டு
அருந்துய ரடைந்து வருந்தினள் தமிழ்மகள்;
நகைநில வெறிக்கும் முகமதி காணாது
செய்வகை யறியாது ஆரஞ ருற்றார்
**தாணிழல் வாழ்க்கை மன்னிய தமரெலாம்;**
ஆசா கெந்தை யாண்டு ளனென்று
தீமுகத் திட்ட மெழுகிற் றேம்பியும்
தாய்முகத் தியாத்த கன்றிற் புலம்பியும்
இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாது
ஏமஞ் சாரா விடும்பை யெய்தினர்
**பெருந்தவத் துதித்த அரும்பெறல் மக்கள்;**

மாரி யிரவில் வாரி தன்னில்
கலத்தை இழந்து கலங்கினார் போலப்
**புலம்பு கொண்டு கலங்கினேன் யானே;**
**அதனால் அத்தை நின்னுடன் கழித்த**
**நாள்போற் கழியா ஞாயிற்றுப் பகலே.**

---

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# 8

# சீர் திருத்தம்

## 8.1 நஞ்சைப் பெருக்கின் நல்லமுதாகுமா?

அல்லும் பகலும் படையைப் பெருக்கின்
அமைதி புவியில் நிலைத்திடுமோ?
கொல்லும் இயல்புடை நஞ்சைப் பெருக்கிடின்
கோதில் அமுதங் கிடைத்திடுமோ?

தன்மொழி தன்னினம் போற்றும் உணர்விலார்
தன்போற் பிறரையும் போற்றலுண்டோ?
அன்புமகவை வெறுக்கும் ஒருத்தி
அயலவர் சேயை அணைத்தலுண்டோ?

துன்பம் விதைத்துநல் அன்பினை ஈட்டுதல்
தொல்புவி தன்னில் நிகழ்ந்திடுமோ?
என்றுங் கொடிக்குக் கொதிநீர் பொழிந்திடின்
ஏருடைப் பூக்கள் மலர்ந்திடுமோ?

பகையைப் பகையினால் நீக்க முயன்றால்
பகைதான் பெருகா தழிந்திடுமோ?
பல்கும் நெருப்பை நெருப்பால் எவருமே
பாரில் அணைக்க முடிந்திடுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் உலகினில் தேவை பெருகிடின்
நாடும் செழிப்பு **நிலைத்திடுமோ**
நீளும் செலவு பெருகிடின் என்றும்
**நிலைத்திடும் மிச்சம் கிடைத்திடுமோ?**

எல்லாம் விதியின் செயலெனக் கூறியே
ஏங்குவார்க் கேற்றம் **வருதலுண்டோ?**
நல்ல கரும்பினை வெட்டிப் பிழிந்திடார்
**நற்சுவைச் சாற்றைப் பெறுதலுண்டோ?**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.2 நீங்கள் யார்?

**மக்கட் குலத்திற் பிறந்தோரே - உங்கள்**
**மனிதப் பண்பை அளந்துரைப்பீர்!**

பிறரைக் கெடுத்து வாழ்வதற்கு - நீங்கள்
பின்னிப் பின்னிச் சூழ்பவரோ?
அறத்தைத் துறந்து மறவழியில் - என்றும்
அன்பு கொன்று வாழ்பவரோ (மக்கட்...)

சிக்கல் பெருக்கும் வாழ்வினிலே - நீங்கள்
செம்மை இழந்து வாழ்பவரோ?
உக்கிப் போன கொள்கைகளை - நம்பி
உருக்கொண்டு ஓலம் இடுபவரோ? (மக்கட்...)

இனத்தைக் காட்டிக் கொடுத்துங்கள் - சொந்த
இன்பம் பெருக்க முயல்பவரோ?
மனத்தை அடக்கி வாழாமல் - நாளும்
மானம் விற்றுப் பிழைப்பவரோ? (மக்கட்...)

சாதி குலங்கள் என்கின்ற - பெருஞ்
சழக்கில் ஊறி உழல்பவரோ?
ஓதிப் பெற்ற பேரறிவால் - பிறரை
ஒடுக்கித் தாழ்த்த நினைப்பவரோ? (மக்கட்...)

இரக்கம் இன்றிப் பிறருழைப்பைத் - திருடும்
எலியின் உள்ளம் படைத்தவரோ?
பரக்கச் சமய வேடமிட்டுக் - கொடிய
பாவம் பழிகள் சேர்ப்பவரோ? (மக்கட்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுமை கண்டு பொங்குகின்ற - வீரம்
சேர்ந்த உள்ளம் படைத்தவரோ?
வறுமை மடமை நீக்குதற்கு - நாளும்
வாட்டம் இன்றி உழைப்பவரோ? (மக்கட்...)

நலிந்தோர் துன்பந் தாங்காமல் - வருந்தும்
நல்ல பண்பு உடையவரோ?
மெலிந்தோர் உயர்ந்து வாழுதற்கு - நிலைத்த
மெய்ம்மைத் தொண்டு புரிபவரோ? (மக்கட்...)

எடுத்த முயற்சி நிறைவேற - என்றும்
எண்ணி எண்ணி முயல்பவரோ?
அடுத்துப் பெருகும் தீமைகளைச் - சிறிதும்
அஞ்சா தெதிர்த்து வெல்பவரோ? (மக்கட்...)

உலக மக்கள் எல்லோரும் - சமனாய்
ஒன்றி வாழ விழைபவரோ?
கலகம் விளைக்கும் கொடியவர்க்கும் - உள்ளம்
கனிந்து நன்மை செய்பவரோ? (மக்கட்...)

நெஞ்சம் என்றும் பொய்யாமல் - நீதி
நெறியில் நிலைத்து நிற்பவரோ?
வஞ்சம் நிறைந்த கொள்கைகளைத் - தகர்த்து
வாய்மை நிலைக்கச் செய்பவரோ? (மக்கட்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8.3 மாபெருங் கொடுமை

இன்றிந்த உலகினிலே இருக்கின்ற கொடுமைகளில்
ஒன்றுந்தன் நிகரின்றி ஓங்கிநின்று நம்வாழ்வைத்
தின்கின்ற பெருங்கொடுமை **தீண்டாமை பாராட்டல்**
என்றெண்ணி இதைநீக்க எண்ணாதார் மனிதரல்லர்.

பண்பாட்டை நனிசிதைத்துப் பகுத்தறிவை மிகக்கொன்று
கண்ணோட்டஞ் சிறிதுமின்றிக் கன்னெஞ்சர் தம்நலத்தை
எண்ணித்தான் **தீண்டாமை** எனுமிந்தக் கொடுமையினை
புண்ணில்வேல் நுழைப்பார்போல்
புவியினிலே புகுத்திவிட்டார்.

கொடுமையினை அறமென்று கொள்ளுகின்ற பித்தர்போல்
நடுநிலைமை சிறிதுமின்றி நாணமின்றி உள்ளத்தைச்
சுடுகிறஇத் **தீண்டாமை** சுருதிவழி வந்ததென்று
படுபெரும்பொய் உரைக்கின்ற பாதகரே தீண்டாதார்.

பரிவுடனே மிருகங்கள் பலவற்றைத் தீண்டிடுவோர்
''அரிதரிது மானிடர்கள் ஆதலெனும்'' தம்வாயால்
எரியதனாற் சுடுதல்போல் ''எளியோருக்கு எமைத்**தீண்டும்**
**உரிமையிலை**'' என்றுரைத்தல்
உவமையிலாக் கொடுமையன்றோ?

அன்போங்க அருள்பொலிய அறந்தழைக்கத் தமிழ்மக்கள்
துன்போடடி வாழுதற்குத் துடிப்புடனே **தீண்டாமை**
என்றோங்கித் துயர்பெருக்கி இருள்பரப்பும் பேய்தன்னை
நன்கோட்டிச் சமத்துவத்தை நாட்டுதலே நல்வழியாம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.4 தீமை விதைக்கலாமா?

**தீண்டாமை** பாராட்டிப்—பெருந்
தீமை விதைக்கின்றார் :
ஆண்டவன் கட்டளையாம்—என்றும்
ஆணை இடுகின்றார்.

மதியிழந் தெம்மக்கள்—இதனால்
மாள்வதைப் பார்த்திடவே
கொதித்து மிகப்பொங்கி—உள்ளம்
குமுறிக் கலங்குதம்மா.

மனிதப் பிறவியினை—நல்ல
மாண்புடைப் பேறென்போர்
கனிவின்றி மக்களிலே—சிலரைக்
கழித்துக் கணிக்கின்றார்.

கொன்று பகுத்தறிவை—நாளும்
கொடுமை பெருக்குகின்றார்;
என்றும் உலகத்தை—மிக
ஏய்த்துப் பிழைக்கின்றார்.

''எண்ணி உணருங்கள்''—என்றால்
ஏசத் தொடங்குகிறார்;
கண்ணை இழந்தவர்போல்—இவர்
காட்சி அளிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறைந்த சுயநலத்தின்—மாய
உருவமே தீண்டாமை
குறைந்த மதிமனிதர்—இதைச்
சொல்வர் விதியென்று.

ஆண்டவன் கோயிலுக்குள்—மாட்டை
ஆட்டை விடுபவர்கள்
மாண்புடை மக்களிலே—சிலரை
மறித்தல் முறையாமோ?

தம்மைக் குறைத்துரைத்தால்—அதைத்
தாங்க முடியாதோர்
செம்மை இழந்திங்கு—சிலரைச்
சிறுமைப் படுத்தலாமோ?

''பிறப்பால் உயர்வுதாழ்வு''—என்று
பேசல் அறமாமோ?
மறத்தால் மதிமயங்கி—இந்த
மாசை மதிக்கலாமோ.

சகத்தோர் அனைவரையும்—சரி
சமனாய் மதித்திடலே
உகந்த மனிதநெறி—இதனை
ஓர்ந்து கடைப்பிடிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.5 புன்னெறி போக்கி நன்னெறி நாட்டுக!

அடுக்கடுக்காய் மாடங்கள் அமைந்துயர்ந்த மாளிகையை
அமைத்துச் செல்வர்
மிடுக்குடனே பகட்டுவாழ்வு மிகக்காட்டிக் கூத்தாட
மிடியாற் பல்லோர்
படுக்கவுமே இடமின்றிப் பயந்தசெல்வக் குழந்தைக்கும்
பருக்கை இன்றி
ஒடுக்கியநோய் வருத்திடவே ஒருவழியுங் காணாமல்
உலைவர் நாளும்.

பள்ளத்தில் விழுந்துமிகப் பரிதவிக்கும் குருடர்போற்
பதைத்துத் துன்ப
வெள்ளத்தின் கரைகாண விரையும்இம் மக்களுக்கு
விடிவே இல்லை.
உள்ளத்தைக் கல்லாக்கி உணர்வுதனைக் கொன்றிந்த
உலகைச் சூறை
கொள்ளத்தான் முயல்கின்ற கொடியவர்கள் கொழுக்கின்ற
கொடுமை என்னே?

இத்தகைய கொடுமையினை என்றென்றும் நிலைநிறுத்த
எண்ணும் நஞ்சர்
எத்தகைய வாழ்வுக்கும் எம்விதியே காரணமாம்
என்று பொல்லாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தமது பிடித்தோர்போற் பிதற்றிடுவார் சாத்திரங்கள்
பேசித் தெய்வ
சித்தமிது என்றிடுவார் சிந்தனையைக் கொல்லுதற்குச்
சிறிதும் நாணார்.

நெல்லோடு சேர்ந்துவளர் நெடுங்களையை வேரோடு
நீக்கல் போலப்
புல்லோர்கள் தாம்கொழுக்கப்
போற்றிவரும் **புன்னெறியைப்**
**போக்கி** இங்கே
எல்லோரும் சமவாழ்வு எய்திடற்குத் தகும்வழியை
ஏற்றம் மிக்க
நல்லோர்கள் நாட்டியின்றே **நலிவோர்க்குச் சமவாய்ப்பு**
**நல்கல் வேண்டும்.**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.6 பெரும் பேய்

மக்களை மயக்கி ஆட்டி
மதியினைக் கெடுத்து வாட்டும்
**உக்கிரப் பேய்கள்** இங்கே
ஊர்தொறும் ஆடிக் கையில்
சிக்கிய மனிதர்க் காற்றும்
சித்திர வதையை எண்ணத்
துக்கமே பெருகி உள்ளம்
துன்புறு கின்ற தம்மா!

உயர்வுடன் தாழ்வு பேசும்
உக்கிய சாதி யாம்**பேய்**,
அயர்விலாத் தீண்டா மைப்**பேய்**,
ஆண்டிடும் நிறப்**பேய்**, அச்சம்
பயந்திடும் கொடும்**பேய்**, கவ்வும்
பட்டினி வறுமைப் **பேய்கள்**,
மயக்கிடுஞ் சாத்தி ரப்**பேய்**,
மலிவுறு கோத்தி ரப்**பேய்**.

*　　　*　　　*

இப்பேய்கள் பிறபேய்கள்
இணைந்தேத்தும் ஒரு**பெரும்பேய்** இங்கு நாளும்
உப்பேபோல் எல்லோரும்
உயிர்வாழ நாடும்பேய் உவமை கூற
ஒப்பேதும் இல்லாப்பேய்
ஒருவரையும் கழிக்காமல் உயிரை வாட்டித்
தப்பேதும் இன்றியுமே
தாக்குகின்ற **தேவையெனும் தலைமைப் பேயே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பப்பா! தேவைப்பேய்
அவனியிலே போடுகின்ற ஆட்டந் தன்னைச்
செப்பத்தான் முடியாதே
செல்வரையும் வறியரையும் சேர்த்தே வாட்டும்
தப்பத்தான் பார்த்தாலும்
தந்திரத்தால் உளம்புகுந்து தளிர்க்கும் காறித்
துப்பத்தான் கருதிடினும்
தொடர்ந்துநின்று தன்னாட்சி துலக்கிக் காட்டும்.

நாட்டினிலே என்றுமெங்கும்
நாளுக்கோர் மேனிகொண்டு நஞ்சை ஊட்டும்,
ஏட்டினிலே முதலிடம்பெற்
றேற்றமுறும், நாகரிகம் என்ற மாயக்
கூட்டினிலே சிலபெண்கள்
கூத்தாடி இப்பேயைக் கொஞ்சிப் போற்ற
வீட்டினிலே வேதனைக்கு
வித்திட்டு, வீரரையும் விரகால் வெல்லும்.

இரண்டொன்றை உடுத்திட்டோர்
இன்றுபத்தை உடுக்கின்றார். எழிலை நாடி
மிரண்டோடும் நங்கையரின்
மேனியிலே ஐம்பதுக்கு மேலே உண்டு.
புரண்டோடும் நாகரிகப்
போர்வையிலே தேவைப்பேய் புகுந்து நாளும்
திரண்டோங்கும் திறம்விளக்கத்
தெளிவான சான்றுபிற தேவை இல்லை.

வாட்டமின்றி மக்களிங்கு
வாழுதற்குத் தக்கதொரு வழியைக் காண
நாட்டமுறின், ஏங்கிநொந்து
நாள்தோறும் இப்பேயை நாடி நாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டமிடும் பழக்கத்தை
ஒழித்துத்தம் உள்ளத்தில் உறுதி கொண்டே
ஆட்டமிடும் இப்பேயின்
ஆற்றலினை அழித்தடக்கி ஆளல் வேண்டும்.

* * *

மக்கட் பெருக்கைக் குறைத்திடற்கு
மதித்துத் திட்டம் வகுத்திடுவோர்
சிக்கல் பெருக்கும் தேவையினைச்
சிறிதுங் குறைக்க எண்ணவில்லை.
தக்க முறையில் தேவையினைத்
தடுத்துக் குறைத்தால் விண்ணவரை
ஒக்க இங்கே வாழ்ந்திடலாம்
ஓங்கும் இன்பம் பெற்றிடலாம்.

* * *

தேவை ஒடுங்கிடின் தேசம் செழித்திடும்
தேவை சுருங்கிடின் செல்வம் பெருகிடும்
தேவை அருகிடின் தீமை குறைந்திடும்
தேவை ஒழிந்திடின் செப்பம் நிலைக்குமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.7 ஒழித்தல் வேண்டும்

உழைத்துழைத்தே உயர்ந்துவாழ முடியும் என்ற
உண்மையினைக் கெடுக்கின்ற அதிட்டச் சீட்டுத்
தழைக்கின்ற கையூட்டுச் சுரண்டல் கொள்ளை
தரகுஏமாற் றனைத்தையுமே **ஒழித்தல் வேண்டும்.**

தேவையற்ற வீண்போலிச் செயல்கள் நாளும்
தீமைகளை வளர்த்துமக்கள் திட்பம் கொன்று
பாவைகளைப் போலாக்கும் பழிச்செயல்கள்
பாரெங்கும் வலிந்**தொழிக்கப் படுதல் வேண்டும்.**

காசுகொடுத் துக்கடவுள் அருளை வேண்டும்
காரறிவுச் செயலையின்றே **ஒழித்தல் வேண்டும்.**
மாசுவிளை கண்மூடிப் பழக்கம் கொள்கை
மல்குமூட நம்பிக்கை **ஒழிதல் வேண்டும்.**

மக்களின்நல் ஆற்றலுடன் உழைப்பு நேரம்
மாண்பெல்லாம் மண்ணாக்கி மயக்கி நாளும்
செக்கிழுக்கும் மாடுகளைப் போல ஆக்கும்
சிறுமதியர் சூழ்ச்சிகளை **ஒழித்தல் வேண்டும்.**

கட்சிகட்டிக் கொடியுயர்த்தி மேடை போட்டுக்
கண்டபடி பொய்யுடனே கரவுஞ் சேர்த்துத்
திட்டுதற்குப் போட்டிபோட்டுக் கூட்டம் கூட்டும்
தீச்செயலை முற்றாக **ஒழித்தல் வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்பிடிப்போர் காக்காய்தான் பிடிப்போர் நன்கு
கைகட்டி வாய்புதைத்து மானம் விற்போர்
வால்பிடிப்போர் பல்லிளிப்போர் வஞ்சர் தோன்றி
வளர்கின்ற சூழலினை **ஒழித்தல் வேண்டும்.**

மாளிகையில் வாழ்வோரைப் பார்க்கும் ஓட்டை
மலிகுடிசை உறைவோர்கள் வறுமை போக்க
ஆளின்றி ஆஅலைவாய்க் கரும்பு போல
அவலமுறும் அடிமைநிலை **ஒழிதல் வேண்டும்.**

* * *

சிலர்தமக்கு வேண்டியன சீராகப் பெற்றுச்
செழித்துவாழ உணவின்றிச் சீர்உடையு மின்றிப்
பலரேங்கித் துடித்துவாழப் பசிவளர்க்கும் இந்தப்
பாழ்பட்ட வாழ்வியலைப் பழி**த்தொழித்தல் வேண்டும்.**

பணமுடையார் கல்வியினைப்
பணம்கொடுத்து வாங்கப்
பாமரர்கள் அவர்போலப் படிக்கும்வாய்ப் பின்றிப்
பிணம்போல உணர்விழந்து பிழைக்கவழி கோலும்
பிறழ்வுமிக்க கல்விமுறைப் பிணி**யொழிதல் வேண்டும்.**

உழைக்காமல் பிறருழைப்பை உறிஞ்சி வாழ்தல்
ஓயாமல் விதிவிதியென் றோலமிட்டு வாழ்தல்
தழைக்கின்ற புல்லறிவு காரறிவு மற்றும்
தாழ்வுமனப் பாங்குயாவும் நன்**கொழிதல் வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.8 ஓங்கல் வேண்டும்

உழைப்பினாலே பொருளாக்கம் **ஓங்கல் வேண்டும்,**
உடையுடனே உறையுளும் நல்உணவும் பெற்று
மழையினாலே பல்வளமும் மல்க மக்கள்
மாண்புடனே சேர்ந்துவாழ்தல் **ஓங்கல் வேண்டும்.**

பலதுறையில் வளர்ந்தோங்கிப் படர்விஞ் ஞானம்
பழிபெருக்கும் பேரழிவுப் படைகள் ஆக்கி
நிலவுலகை அழிப்பதனை நிறுத்தி விட்டு
நிலைக்கும்நற் பொருள்களாக்கல் **ஓங்கல் வேண்டும்.**

சாதிகுலம் நிறம்சமயம் வறுமை செல்வம்
சாதிக்கும் போட்டிபூசல் சதிகள் மோதல்
மேதினியில் தோன்றாமல் உயர்வு தாழ்வு
மேவாத சமவாழ்வு **ஓங்கல் வேண்டும்.**

தாம்மட்டும் வாழாமல் தமரும் வாழத்
தயங்காமல் உழைப்போர்கள் **ஓங்கல் வேண்டும்**
சாம்புகின்ற மக்களினைத் தாங்கிப் பேணும்.
சால்புடைய பேரறிஞர் **ஓங்கல் வேண்டும்.**

அன்புமருள் அறமும்நல் உழைப்பும் உண்மை
அசையாத உறுதியுடன் கட்டுப் பாடும்
மன்னுபெருங் கண்ணியமும் கடமை எல்லாம்
மக்களிடை நன்குநிலைத் **தோங்கல் வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தென்றும் விழாவென்றும் வீணில் நாளும்
விரும்பியாங்கு செலவுசெய்வோர்
வெறுஞ்சோ றின்றித்
துரும்புபோலத் துவள்வோரின் துடிப்புப் போக்கி த்
துயர்தீர்க்கும் தொண்டாற்றல் **ஓங்கல் வேண்டும்.**

எவர்க்குமெந்தத் துன்பமுஞ்செய் யாமல் நாளும்
எல்லோரும் நல்லின்புற் றிருக்கச் செய்து
புவனியைப்பொன் உலகமாகப் புதுக்கும் நல்லோர்
பொன்மொழிகேட் டொழுகிஉல **கோங்கல் வேண்டும்.**

* * *

பெற்றதாய்போல் தாய்மொழியைப்
பேணித்தாய் நாட்டைப்
பெருஞ்செல்வ நாடாக்கப் பெருந்தொண்டு செய்தல்
உற்றபசி தீர்க்கின்ற உழுதொழிலை ஊக்கல்
உயர்மரங்கள் வளர்த்திடுதல் ஒன்**றியோங்கல் வேண்டும்.**

ஒழுக்கமுடன் அடக்கம்பேர் ஒழுக்கமுயர் வாய்மை
ஒற்றுமைநற் பொறுமையெலாம் ஒன்றாகக் கொண்டு
விழுப்பமுறு நடுநிலைமை விடாமுயற்சி பூண்டு
விளங்குதமிழ் மறைவழியில் வா**ழலோங்கல் வேண்டும்.**

எல்லோர்க்கும் சமவாய்ப்பும் யாவர்க்கும் என்றும்
ஏற்றமுறு சமவாழ்வும் இசைந்திடற்கு வெற்றுச்
சொல்லளவில் நில்லாமற் சுட்டெரிக்கும் தீப்போல்
தொல்லைகளை அழிக்குமாட்சி தோன்றி **யோங்கல்
வேண்டும்.**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

# புது உலகம்

விண்ணை அளக்கும் விஞ்ஞானம்
வேண்டும் உணவைப் பெருக்கவில்லை.
மண்ணில் மக்கள் மாடுபோல
மாய்ந்து நாளும் உழைத்தாலும்
எண்ணும் பயனைப் பெற்றிடாமல்
இரங்கி நொந்து உழல்கின்றார்.
கண்ணைப் பொத்தி ஏமாற்றிக்
கயவர் செழித்து வாழ்கின்றார். 1

அன்றும் இன்றும் உலகினிலே
அமைதி இல்லை, பலமக்கள்
என்றும் கொடிய வறுமையினால்
ஏங்கித் தவித்து மாழ்கின்றார்.
நன்றும் தீதும் அறியாமல்
நாளும் மக்கள் மோதுகின்றார்.
இன்றும் அழிவு பெருகுவதை
எதிர்த்துத் தடுப்பார் எவருமில்லை. 2

மக்கள் வாழ்வை உயர்த்துதற்கு
மன்னு தொண்டு பலசெய்யத்
தக்க வாய்ப்புத் தேடினோர்கள்
தங்கள் வாழ்வை உயர்த்துகிறார்;
உக்கல் ஆட்சி செய்வோரை
உயர்த்திப் புகழ்ந்து கொழுக்கின்றார்.
துக்கம் துன்பம் பெருக்கெடுக்கத்
துடித்து மக்கள் வாடுகின்றார். 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாற் காணும் குழப்பங்கள்
காதாற் கேட்கும் ஓலங்கள்
எண்ணில் அடங்கா ஏடுகளும்
எங்கும் ஒலிக்கும் வானொலியும்
புண்ணில் நெருப்பைப் புகுத்தல்போல்
புகலும் அவலச் செய்திகளும்
நண்ணும் போரும் போட்டிகளும்
நாளும் பெருகும் கொடுமைஎன்னே! 4

* * *

நாடுகள் பலவும் கூடி
நாட்டிய சங்கம்* நாடி
ஓடுவார் தமக்கு நன்மை
ஒன்றுமே செய்ய வில்லை;
பீடுடன் ஆற்றல் குன்றிப்
பேச்சினில் மட்டும் வாழ்ந்து
தேடுவா ரின்றி நாளும்
தேய்ந்திடும் நிலைமை பாரீர்! 5

நாடுகள் தம்முள் போட்டி
நாட்டியே பொறாமை அச்சம்
கேடுகள் பெருக்கிப் பாம்பும்
கீரியும் போன்று வாழ
ஏடுகள் கட்சி கட்டி
எழுத்தினால் பகையை மூட்ட
தேடுநல் அமைதி பாரில்
சீருடன் நிலைத்தல் உண்டோ? 6

மக்களைப் பிரித்தும் ஏய்த்தும்
மாசுடை ஏற்றத் தாழ்வுச்
சிக்கலை வளர்த்தும் வாடச்
செயும்தனி உடைமைக் கொள்கை

---

* ஐக்கிய நாடுகள் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

உக்கிய ஆட்சி யாளர்
உவந்துசெய் சூழ்ச்சி என்போர்
தக்கநல் ஆட்சி மாற்றம்
தரும்சம வாழ்வை என்பர். 7

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

விடுதலை உணர்வோ டாற்றல்
விரும்பிடும் உரிமை யாவும்
ஒடுக்கியே அடிமை வாழ்வை
ஓங்கிடச் செய்யும் இங்கே
கெடுமதி யாளர் கூறும்
கிளர்பொது உடைமைக் கொள்கை
சுடுமிது வேண்டாம் என்று
சூழ்ச்சியால் எதிர்ப்போர் சொல்வர். 8

* * *

கொள்கைகளாற் போராட்டம் தொழில்கள் செய்வோர்
கூலிகேட்டுப் போராட்டம் கூடி வாழும்
உள்ளமிலார் போராட்டம் உள்ளோர் இல்லோர்
ஒன்றுபடப் போராட்டம் உயர்க றுப்பர்
வெள்ளையர்கள் போராட்டம் வெற்றுக் கட்சி
வெறியர்கள் போராட்டம் வேடம் பூண்டு
துள்ளுவோர்தம் போராட்டம் தொடர்போர் ஆட்டத்
தொகைதன்னைக் கணித்துரைக்கத் துணிவார் யாரோ? 9

இவையாவும் ஒழிந்துநல்ல எழுச்சி மிக்க
இன்பமயப் **புத்துலகம் இனிது தோன்ற**
நவையில்லா ஆட்சிமுறை நாட்டில் என்றும்
நன்கமைந்து மிளிரவேண்டும். நன்கு கற்றோர்
அவைபோற்றும் சால்புடையோன் தலைவன் ஆகி
அமைச்சரினைத் தானேதேர்ந்து அமர்த்தி வாழ்விற்
சுவைகாண எல்லோரும் உழைத்து வாழும்
சூழலினை உருவாக்கி ஆளல் வேண்டும். 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்மன்ற நாடாளும் உச்சி மன்ற
உறுப்பினர்கள் கட்சியின்றித் தகுதி நோக்கித்
தேர்ந்தெடுக்கப் படுதற்குத் திட்பம் மிக்க
தேர்வுமுறை வகுத்திட்டால் பகைமை தோன்றித்
தீர்த்திடவே முடியாமல் தீப்போல் பற்றும்
தீமைகளாம் கட்சிவெறி பிளவு மோதல்
போர்களெல்லாம் ஒழிந்துமக்கள் அமைதி பேணிப்
புகலறத்தின் வழிநின்று பொலிந்து வாழ்வர். 11

நீதிமன்றம் யாவும்நல் அறத்தைக் கூறும்
நிலையங்க ளாகஅமைந் தொளிர வேண்டும்
ஓதியுணர்ந்த சான்றோர்தம் குழுவே தீர்ப்பை
உரைக்கவழி வகுக்கவேண்டும் சட்டம் காட்டி
வாதிட்டு வெல்லுதற்கு வழியைத் தேடி
வரம்பின்றிப் பொய்யினை மெய்யோடு நன்கு
மோதிடச்செய் வழிக்கறிஞர் தொல்லை நீக்கி
முறையாக நீதியோங்கச் செய்தல் வேண்டும். 12

ஆட்சியினைப் பாழாக்கி அழிவை ஈட்டும்
அரசியல்சார் கட்சியெலாம் அழிதல் வேண்டும்
மாட்சியிலாத் தேர்தல்கள் மக்கள் வாழ்வை
மாய்க்கின்ற ஊழல்கள் ஒழிதல் வேண்டும்
மீட்சிதரும் **உறையுளுடை உணவு மூன்றும்**
மேதினியில் யாவர்க்கும் கிடைக்க வேண்டும்
போட்டியின்றி உழைப்பினாலே பொருளைச் சேர்த்துப்
பொருள்குறைந்தோர்க் குவந்தளித்துப்
போற்றல் வேண்டும். 13

* * *

மூன்று'உ'க்கள் எல்லோரும் முதலிற்பெற் றுவந்துவாழ
முயற்சி செய்தல்
ஊன்றுகோலைப் போல்தளர்வோர்க் குதவிசெய்தல்
முறைசெய்து குறைகள் நீக்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈன்றதாயைப் போலமக்கள் எல்லோர்க்கும் வேற்றுமைகள்
இன்றி அன்பு
தோன்றிடநற் பணியாற்றல் துயர்தீர்த்தல் நல்லரசின்
தொழில்க ளாகும். 14

இத்தகைய நல்அரசை இயக்குகின்ற பணியாளர்
இனிய பண்பும்
எத்தகைய ஊழலுக்கும் எள்ளளவும் இடம்கொடுக்கா
இயல்பும் வாய்ந்தே
எத்திறத்த தேவைக்கும் எவரையுமே அலைக்காமல்
என்றும் மக்கள்
உத்தமர்கள் என்றுபுகழ்ந்து உரைக்குமாறு
தம்கடமை உணர்ந்து செய்வர். 15

மக்கள்நன் குழைத்துயர்ந்து
மாண்புடனே வாழ்ந்திட்டால்
மறத்தை நாடார்
திக்கனைத்தும் புகழ்மணக்கத் திறமையுடன் நல்லாட்சி
திகழ்ந்தால் யாரும்
எக்களத்தும் தீமைசெய்ய எண்ணுவரோ அச்சுறுத்தி
இடித்துக் காவல்
ஒக்கவேசெய் படைவேண்டாம் **ஓங்கமைதி பேணுபடை**
ஒன்றே போதும். 16

பொருள்அளவிற் சமவாழ்வைப்
பொதுமக்கள் பெறுதற்குப்
பொருத்த மாக
மருவுபுகழ்ச் சமவாய்ப்பு, மன்னுதொழிற் களங்களிலே
மதிப்பை நல்கி
இருளகற்று கல்வியிலே எல்லோர்க்கும் நிறைவாக
இருத்தல் வேண்டும்.
திருவளர்க்கும் **நல்லுழைப்பு திகழுமுறுதி உண்மையுடன்**
சேரல் வேண்டும். 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மூன்றும் வகையினிலே இரண்டாகும் உகரங்கள்
இவற்றைப் போற்றி
மந்திரம்போல் **கடமையுடன் கட்டுப்பாடு கண்ணியத்தை**
மதித்து வாழ்ந்தால்
எந்தவிதத் துன்பங்கள் ஏக்கங்கள் தொல்லைகளும்
இன்றி மக்கள்
நந்தலில்லாச் சிறப்போடு நாகரிக வாழ்க்கையினை
நாளும் வாழ்வர். 18

நாட்டுமக்கள் எல்லோரும் நலம்பயக்கும் தேவைகளை
நன்கு பெற்றுப்
போட்டியின்றி வாழுதற்குப் போதுமான வாய்ப்புக்கள்
பொருள்கள் ஆக்கல்
வாட்டுகின்ற தேவைகள் வளராமல் தடுப்பதற்கு
வரம்பு கட்டல்
ஈட்டுபுகழ் ஆட்சியினர்க் கிசைந்த முதற் கடனாகும்
என்பர் கற்றோர். 19

குற்றமிலாச் சமவாய்ப்பும் கோதில்லாச் சமவாழ்வும்
கொடுக்கும் ஆட்சி
நற்றமிழ்போல் நிலைத்துநின்றால் நாட்டினிலே
புற்றுநோய்போல் நசுக்கும் தீமை
பற்றுகின்ற வறுமையுடன் பகைகளவு சூதுவாது
பழிகள் யாவும்
எற்றுகின்ற களைகொல்லி எரித்தழிக்கும் களைகள்போல்
எளிதில் மாயும். 20

* * *

உண்டியைக் கொடுப்போர் உயிரினைக் கொடுப்பர்
ஒருபெரும் உண்மையாம் இதனைக்
கண்ணெனப் போற்றி நிலத்தொடு நீரே
கருதிடும் உணவினைப் பெருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்மையை உணர்ந்து நிலத்தினில் நீரை
நுனித்தறி வழிகளாற் சேர்த்துப்
பண்ணைகள் செழித்துப் பயன் தரச் செய்தல்
பண்புடை ஆட்சியின் பயனாம். 21

மாநகர நூலகசேவை
யாழ்ப்பாணம்

உடலினை ஓம்பல் ஒக்கவே மக்கள்
உள்ளமும் பண்பினால் ஓங்கக்
கடலினைப் போலக் கலைகளைப் பெருக்கிக்
கருத்துடன் பேணலும் தக்க
இடமெலாம் கலையின் எழிலரங் கெண்ணம்
இயம்பிடும் அரங்குகள் நிறுவி
மடந்தனை அகற்றி மலர்கலை விருந்தை
மாண்புற வழங்கலும் வேண்டும். 22

குழந்தைகள் நாட்டின் கொளற்கருஞ் செல்வம்
குறைவிலா உடம்பினோ டுளமும்
பழக்கமும் நல்ல பயிற்சியும் அவர்கள்
பரிவுடன் பெற்றிடத் தக்க
அழகிய சூழல் அமைந்திடச் செய்து
அவர்களைப் பயிரினைக் காக்கும்
உழவனைப் போல ஓம்புதல் அரசின்
ஒப்பிலாப் பெருங்கடன் ஆகும். 23

* * *

எழுத்தறியேம் படித்தறியேம் எந்நாளும் பள்ளி
எதற்கும்நாம் போயறியேம் என்றுரைக்கும் இந்த
இழுக்குதனை ஆர்வத்தோ டிப்பொழுதே நீக்க
இடையறாது முயலுதலே எல்லோர்க்கும் நல்ல
விழுப்பத்தை அளிப்பதற்கு விரும்புகின்ற ஆட்சி
விரைந்துசெய்யும் முன்னீட்டு விறன்மிகுந்த தொண்டாம்.
எழுச்சிமிகு **புத்துலகம்** இனிதுநிலைத் தோங்க
எல்லோர்க்கும் ஏற்றகல்வி எஞ்ஞான்றும் வேண்டும். 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறத்தினாலும் மதத்தினாலும் இனத்தினாலும் மற்றும்
நிலைத்திட்ட பல்வேறு நிலைமைகளைக் கொண்டும்
பிறந்துவளர் சிறுபான்மை பெரும்பான்மைக் கொள்கை
பிரித்தழிவை விளைக்காமல் எல்லாரும் எந்தத்
திறத்தினிலும் சமனாவார் எனக்கொண்டு அச்சம்
திகைப்பின்றி மோதலின்றிச் சிறுபான்மை மக்கள்
சிறந்துவாழ ஒப்பீடு சிறிதுமின்றி நீதி
சிதையாமல் ஆட்சிசெய்தால் சிறந்தோங்கும் நாடு. 25

தனிமனிதன் செம்மையுற்றால் சார்ந்தமனை வாழ்வு
தலைதூக்கும், குடும்பங்கள் தனிச்சிறப்புப் பெற்றால்
புனிதமடைந் தூர்களெல்லாம் புதுப்பொலிவு கொள்ளும்,
புகலுமூர்கள் ஓங்கநாடும் புகழீட்டும், இன்பம்
நனிபெருகும், மக்களகம் நல்லன்பிற் றோயும்,
நாடுமருள் மலர்ந்தறமும் நனிநிலைக்கும் இந்த
இனியஅன்பும் அருளறமும் எனும்அகரம் மூன்றும்
இருக்கைகொண்டால் மண்ணுலகம்
பொன்னுலகம் அன்றோ! 26

மண்ணுலகு பொன்னுலகாய் மகிழ்ச்சியுல காதல்
மரபுவழிக் கற்பனையும் மலிகனவும் அன்றே.
உண்ணுகின்ற பாலுடனே ஊற்றுநீரைச் சேர்த்தால்
ஒன்றாதல் போல்நாட்டில் ஓங்குமாட்சி யோடு
திண்ணமாக மக்களொன்று சேர்ந்துழைத்து மாண்பு
சிறந்தோங்கும் குறிக்கோளைத் திறம்பாமல் எய்தின்
எண்ணுகின்ற வாறேநல் இன்பத்தை என்றும்
எய்திடலாம். இஃதொன்றே ஏற்றவழி ஆகும். 27

* * *

உலகத்தை முழுதாக ஒருநொடியில் அழிக்கின்ற
அலகில்லா ஆற்றலுள்ள அழிவுசெயும் கருவிகளைக்
கலக்கமின்றிப் படைக்கின்ற காரிரும்பு மனப்பான்மை
நலம்பெருக வேண்டுமெனின்
நன்குசிதைந் தொழியவேண்டும், 28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநிமிட நேரத்தில் ஒருகோடி உருபாவைப்
பெருமழிவு விளைக்கின்ற பிறங்குநுட்பப் போர்க்கருவி
உருவாக்கப் போட்டிவளர்த் துணர்விழந்து செலவழித்துக்
குருட்டாட்டம் ஆடுகின்ற
கொடுமையின்றே ஒழியவேண்டும். 29

படைகொண்டார் நெஞ்சமிந்தப் பாரினிலே நல்லவற்றை
அடையவெண்ணா திதுபொய்யா
அமுதமொழி. வாளெடுத்தார்
தடையின்றி வாளினாலே தாம்மாழ்வர் இவையுலகை
உடைத்தழிக்க முயல்வோரை
உய்விக்கும் உரைகளன்றோ! 30

பலமுனையில் விஞ்ஞானம் பார்வியக்க வளர்ந்தாலும்
நலமுடனே மனிதர்கள் நனிசிறந்து வாழுதற்குச்
சிலதேவையினை நிறைவு செய்யவில்லை விரைவினிலே
நிலவுதண்ணீர்ப் பஞ்சத்தை நீக்குதற்கு முயலவேண்டும்.
31

சந்திரனை வான்வெளியைச் சாற்றுபல கோள்களினை
எந்தநாளும் ஆய்கின்ற எழுச்சியுறு விஞ்ஞானம்
இந்தநில உலகினிலே இன்றுகுடி நீரின்றி
நொந்துவாடும் மக்களினை நோகவிடல் நீதியாமோ? 32

நிலவுலகில் யாவர்க்கும் நீர்கிடைக்க வழிசெய்ய
நிலவுகடல் நீரைமழை நீரைநிலத்தி லுறுநீரைப்
பலநுட்ப வழியினாலே பயன்படுத்த முயலவேண்டும்
குலமுகிலை ஈர்த்துமழை கொட்டுமாறு செய்யவேண்டும்.
33

நாடுகளின் தேவைகளை நல்லுறவு வளர்ந்தோங்க
ஈடுசெய்தும் ஒன்றோடொன்று
இசைந்துவாழ வழிவகுத்தும்
பீடுடைய நட்புறவைப் பேணிநாளும் வளர்த்திட்டால்
நாடுகின்ற **புத்துலகம்** நன்குநிலைத் தோங்குமன்றோ? 34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலுள்ள நாடெல்லாம் ஒன்றுகூடி இறைமையுடன்
நிலவுமொரு பாராளும் நிறுவகத்தை உருவாக்கித்
திலகம்போற் போற்றியதன் தீர்ப்புகளை உவந்தேற்றல்
நலம்கெடுக்கும் பூசல்கள் நன்கொழியும் வழியாகும். 35

நாடெல்லாம் சமனாக நன்கிணைந்தே இத்தகைய
பீடெல்லாம் நிறைந்தொளிரும் பேருலக அரசொன்றைக்
கேடெல்லாம் நீக்குதற்குக் கேண்மையுடன் நிறுவினாலே
பாடெல்லாம் நீங்கிமக்கள் பண்புடனே வாழ்வார்கள். 36

உலகஅரசு உருவாகின் உலகமக்கள் ஒருகுலமாய்
நிலவுபடை இன்றிநாளும் நிறையும்போர்க் கருவியின்றிக்
குலவுமச்சம் ஐயமின்றிக் கொள்கைகளின் மோதலின்றிக்
கலக்கமின்றிக் கவலையின்றிக்
களிப்புடனே வாழ்ந்திடலாம். 37

ஓருலகப் பேரரசுக் கொப்பற்ற வழிகாட்டி
சீருடைய உலகமறை செப்புபொது மறையென்று
பாருளோர்கள் போற்றுகின்ற
பான்மைமிகு தமிழ்மறையே
தேருங்கால் திருக்குறளிற் சிறந்தமறை உலகிலுண்டோ?
38

*இருவகையில் மூன்றாகும் இன்பவாழ்வின் உகரங்கள்
கருதுபுகழ் நிறைமூன்று ககரங்கள் காசினியில்
அரும்பேறு நல்கும்மூன்று அகரங்கள் நிலைத்துநின்றால்
திருநிறைய எல்லோரும் சிறந்தவாழ்வை வாழ்ந்திடலாம்.
39

* * *

* இருவகை மூன்று உகரங்கள்: 1. உணவு உடை உறையுள்.
2. உழைப்பு, உறுதி, உண்மை.
மூன்று ககரங்கள்: கடமை, கட்டுப்பாடு, கண்ணியம்
மூன்று அகரங்கள்: அன்பு, அருள், அறம்.
(9,10,12,13,20 ஆம் பாட்டுக்களை நோக்குக).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல குறிக்கோளை நாடிநாம் கைக்கொண்டே
எல்லாரும் துன்பின்றி இன்புற்றுத்—தொல்லைகள்
தீர்ந்து புதுஉலகிற் சீராக வாழ்ந்திடற்கு
ஓர்ந்து முயல்வோம் உவந்து.

156838

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

# வெற்றி! வெற்றி!!

**வெற்றி கண்டார் தமிழர்கள்**
**விடாமல் முயன்று வெற்றிகண்டார்.**
சுற்றி நின்ற பகைவர்கள்
சுழன்று விழுந்து தோற்றார்கள்.
முற்றி நின்ற அடிமைவாழ்வு
முழுதும் நீங்கத் தமிழ்நிலத்தைப்
பற்றிக் கொண்டார் தமிழர்கள்
பாரில் உள்ளோர் வியக்கின்றார்.

பொய்யும் புரட்டும் பரப்பிஎங்கும்
பொன்னும் பொருளும் அள்ளிவீசி
மெய்யை மறைத்த பகைவர்கள்
மேலும் மேலும் திட்டம்போட்டு
உய்ய விடாமல் இனக்கொலையை
ஊக்கி எம்மை அழித்தொழிக்கச்
செய்த சூழ்ச்சி தகர்த்தெறிந்து
**தீரத் தமிழர் வென்றுவிட்டார்.**

படையைக் கொண்டு தமிழர்க்குப்
பகர முடியாக் கொடுமைகளைத்
தடைகள் இன்றிச் செய்தோர்
தயங்கி விழுந்து தோல்விபல
அடையச் செய்தே இளைஞர்கள்
அரிய வெற்றி ஈட்டிவிட்டார்,
**குடையைக் கண்ட மாடுபோலக்**
**கொலைஞர் வெகுண்டு பாய்ந்துவிட்டார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் வாழும் தமிழ்ஈழம்
தாங்க முடியா இடர்க்கடலில்
அமிழ்ந்து துன்பம் உற்றபோதில்
அஞ்சா இளைஞர் உயிர்வாழ்வு
குமிழி போன்ற தென்றுரைத்துக்
கூற்றுப் போன்றோர் தாக்குதலை
நிமிர்ந்து நின்றே எதிர்த்துவென்று
நிலைத்த புகழைப் பெற்றுவிட்டார்.

விடிந்து விட்ட தெங்களுக்கு
விரைந்து பகையாம் இருள்தன்னைக்
கடிந்து நீக்கி வெற்றியெனும்
கதிரோன் நன்கு தோன்றிவிட்டான்.
படிந்து கிடந்த துன்பமெல்லாம்
பனிபோல் மறைந்து பகைவருடன்
முடிந்து போகத் தமிழ்ஈழம்
முழுதும் பெற்றே ஆள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

# பல்வகை

## 11.1 தமிழ்ப் பொழில்

செந்தமிழ்ப் பொழிலே! செந்தமிழ்ப் பொழிலே!!
பன்மலர் மலர்ந்து நன்மணம் பரப்ப
குயிலின் இசையொடு பயில்வண் டரற்ற
மயிலின் கணமொடு பயில்கொம் பாட
நறுமென் றேறற் சிறுதுளி பிலிற்ற
அருளி லார்தம் மருளுடை மனம்கொள்
இருள்போ னீங்கா விருள்குடி கொண்டு
நறுமென் தளிராம் சிறுமெல் விரலும்
நாருடை மொட்டாம் ஏருடை நகமும்
தற்சூழ் அளியாம் பொற்புடைக் கடகமும்
சீர்பெறக் கொண்டே பார்மகள் தன்னுடை
ஏர்நிறை வதனச் சீர்தனை நோக்க
ஆடியாம் மதிதனை நாடியே நீட்டிய
சீருடைக் கைபோற் காருட னோங்கிய
பன்மரப் பொழில்தான் மன்னா வுலகோர்
உடற்களை தீர்த்துத் திடம்பெறச் செய்து
மன்னா வின்பம் தன்னை நேர்தல்
அன்றி அறிவருள் நின்போற் பற்பல
பவவினை யாலாம் பவக்களை போக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்தவத் தோரும் வருந்தியே பெற்றிடும்
அழியா வின்பக் கழிபெருஞ் சிறப்புடை
வீடுதனை யளிக்கும் பீடுடைத் தொன்றோ?
அதனால்,
நிலையிலா வுலகத்து நிலைத்து நிற்கும்
இறைபோ லவர்தம் நிறையரு ளாலே
இமிழ்திரை வேலித் தமிழகம் ஓங்கக்
கலைபல பரப்பி நிலைத்திருப் பாயே.

பொது நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

---

## 11.2 குறிஞ்சி ஏடு

முன்பு தமிழர் வகுத்துவைத்த
முதலும் உரியும் கருவுஞ்சேர்
அன்பு வாழ்வுத் திணைகளுள்ளே
அழகுக் கழகு செய்திலங்கும்
இன்பத் திணையாம் குறிஞ்சியெனும்
இனிய பெயரைப் பூண்டஏடு
நன்கு தமிழை வளப்படுத்தி
நன்மை பூத்துப் பொலிந்திடுக.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11.3 காரைக்குடி திருவள்ளுவர் கழகம்

அன்புகூர்ந்து விடுத்த உங்கள்
அழைப்புக் கண்டு மகிழ்வுற்றேன்
இன்பம் நிறைந்த உள்ளத்தால்
இயம்பும் நன்றி ஏற்றிடுக.

இமிழ்கடல் உலகில் அன்பும் இன்பமும் நிறையக் கொண்ட
சிமிழ்தனை நிகர்த்தே மக்கள்
சிந்தையைத் திருத்தித் தேவர்
அமிழ்தினை வென்று துன்பம் அகற்றிடும் உலக நூலாம்
தமிழ்மறை தன்னைப் போற்றும்
தமிழ்விழாப் பொலிக மாதோ.

---

# 11.4 மறைமலை அடிகளார் மன்றம்

அண்டிவந்தோர் சூழ்ச்சியினால் அவலமுற்று
மதிமயங்கி அடிமை வாழ்வு
கொண்டிருந்த தமிழினத்தின் குறைநீக்கிப்
புதுவாழ்வு கொடுத்து மீண்டும்
பண்டிருந்த சிறப்பெல்லாம் பண்புடனே
எய்தவழி பகர்ந்த செம்மல்
மண்டுபுகழ் மறைமலையை நினைவுறுத்தும்
கலைமன்றம் மலர்ந்து வாழ்க.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11.5 கொழும்புத் தமிழ்ச் சங்கம்

அன்றொருநாள் கவிக்கூட்டம்
அமைத்ததொரு சேதணையை
அண்டி வந்த
குன்றொடுநேர் புயமுடையான்
குலவமரர் தொழுஞ்சீர்க்கா
குத்தன் போன்றே
இன்றொருநாள் கவிஞர்கள்
இசைபாடத் தொண்டாற்றும்
சேதுப் பிள்ளை
என்றொருபேர் படைத்தானோ
டிராகவனும் எழுந்தருள்க இனிது மன்னோ!

---

## 11.6 சேலம்-குகை திருக்குறள் கழகம்

அன்பு பெருக அனுப்பிவைத்த
அழைப்புக் கிடைக்க அகத்தினிலே
இன்பு கொண்டேன் விழாச்சிறக்க
என்று மகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

வரம்பில் புகழார் வள்ளுவர்க்கு
வையம் போற்ற விழாவெடுத்து
நிரம்பத் தொண்டு செய்கழகம்
நீடு வாழ்க நீணிலத்தில்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11.7 மயிலை சீனி வேங்கடசாமிக்கு

என்றும் தமிழ்த்தாய்க் கெழிலார் பணிகள்
இயற்றும் நீங்கள் விடுத்த
இன்பம் பெருக்கும் இணையில் நூலை
இன்று பெற்று மகிழ்ச்சி
நன்கு கொண்டேன் அன்பு ததும்பி
நண்பு பொங்கக் கூறும்
நன்றி ஏற்க. உங்கள் தொண்டு
நாளும் சிறந்து பொலிக.

---

## 11.8 சாலை இளந்திரையனுக்கு

உள்ளி வந்து குறள்விருந்தை
உய்ய அளித்த உங்களுக்கு
அள்ளி வழங்கச் செம்பொன்னும்
ஆடை அணியும் இல்லெனினும்
துள்ளிக் குதிக்கும் உள்ளத்தால்
தூய நன்றி கூறுகின்றோம்!
நள்ளி பேகன் இன்றிருந்தால்
நாடும் உமக்கு வழங்கிடுவார்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

# குறிப்புரை

## 1. இயற்கை

### இமயத்து உச்சியில்

1960 ஆம் ஆண்டில் மொசுக்கோ நகரில் அனைத்துலகக் கீழை நாட்டியல் புலவர்களின் 25 ஆவது மாநாடு நடைபெற்றது. உருசிய அரசின் அழைப்பை ஏற்று அம்மாநாட்டில் பங்கு கொண்டு 'தமிழர் நாகரிகம்' எனும் பொருள் குறித்தோர் ஆய்வுரை நிகழ்த்தினேன். மொசுக்கோ நகருக்குச் செல்லும்போது தெல்லி மா நகரிலிருந்து உருசிய வானூர்தியில் இமயமலையைக் கடந்து சென்றேன்; அப்பொழுது இயற்றப்பட்டவை இப்பாடல்கள்.

### அந்தி மயக்கிடும் நேரத்தில்

மாலை நேரத்தில் வங்கக் கடலோரத்தில் 1962இல் கருக்கொண்டவை.

## 2. தமிழ்ப் போராட்டம்

### தமிழைப் போற்றுக

தமிழுணர்ச்சியின்றித் தமிழிற் பிறமொழிச் சொற்களை வரையறையின்றிக் கலந்தெழுதியும் பிறமொழி எழுத்துக்களைப் புகுத்தி எழுதியும் தமிழ் மொழியின் செம்மையையும், பெருமையையும், வளமையையும் சிதைப்பதைத் தாங்க முடியாமல், ''தமிழர் தம்வாழ்வில் தாய்த் தமிழுக்கே எல்லாத் துறையிலும் முதன்மை கொடுக்க வேண்டும்,'' என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்தினை இலங்கையில் நாட்டுதற்குத் தமிழ் இயக்கம், தமிழ்மறைக் கழகம், இலங்கை வானொலித் தமிழ்க்கலை மன்றம் முதலியவற்றினை நிறுவி அஞ்சாமலும், அயராமலும் உழைத்தபொழுது 1962இல் உருக்கொண்ட பாடல் இது வாகும்.

**தமிழரே உறங்காதீர், இளைஞர்களே எழுங்கள், ஆசிரியர்களே வாருங்கள்.**

1944 ஆம் ஆண்டு தொடக்கம் 1956ஆம் ஆண்டுவரை தமிழும் சிங்களத்துடன் அரச மொழியாகச் சட்ட உரிமை யுடன் திகழ்ந்தது. இந்நிலைமையை மாற்றுதற்கு, 1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டுமே இலங்கையின் அரச மொழி எனும் சட்டம் ஆக்கப்பட்டது. இதனால் தமிழ் மொழியை அரியணையிலிருந்து இறக்கித் தாழ்த்தி ஒடுக்கியது சிங்கள அரசு. தமிழ் மக்கள் இரண்டாந்தர மக்களாக்கப்பட்டனர். இந்தக் கொடுமையை எதிர்த்துத் தமிழுக்கும் தமிழினத் துக்கும் உண்டான இழிவினை நீக்குதற்குத் தமிழ் மக்களை யும் சிறப்பாக இளைஞர்களையும் ஆசிரியர்களையும் தமிழுரிமைக்குப் போராடுமாறு இப்பாடல்கள் தூண்டு கின்றன.

''ஒன்றுபட்டுச் செந்தமிழின் உரிமைப் போரை, ஓங்கிடவே புரிந்திட்டால் உண்டே வெற்றி' என்று 1956 இற்பாடப்பட்ட உறுதி மொழி இன்று நிலை நாட்டப்பட்டுள்ளது. இந்தியா - இலங்கை உடன்படிக்கை தமிழையும் அரச மொழியாக ஆக்கியுள்ளது.

## 3. தமிழர் போராட்டம்

### முரசே கொட்டு

குடி உரிமை, நில உரிமை, மொழி உரிமை, ஆட்சி உரிமை பறிக்கப்பட்டு அடிமைகள்போல் வாழும் தமிழினத் தின் உரிமைப் போராட்டம் வெற்றி பெறும்; அடக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள்வோர் அழிவைத் தழுவுவார்கள்; தமிழினத் துரோகிகள் பழியீட்டுவர் என்று உணர்த்தி உரிமைக்குப் போராடும் தமிழினத்தை ஊக்குதற்கு 1960இல் பாடப்பட்டவை இப் பாடல்கள்.

**பறையே முழங்கு**

தமிழ் மக்களின் அகிம்சைப் போராட்டங்கள் சிங்களப் படையாலும் பெரும்பான்மை மக்கட் பலத்தாலும் அடக்கி ஒடுக்கப்பட்டதால் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் தோன்றிற்று. ''தீவினை செய்தார் கெடுவர்'' எனும் பொய்யா மொழியை முழங்குகின்றது பறை. 1985இற் படைக்கப்பட்டன இப்பாடல்கள்.

**களம் காணவம்மின்**

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியீடான 'புதுநானூறு' எனும் கவிதைத் தொகுப்பு நூலுக்கு 15-7-87இல் எழுதி அனுப்பப்பட்ட கவிதை.

இக்கவிதை எழுதப்பட்ட மூன்று கிழமைகளுள் பல நாட்டுப் பத்திரிகை நிருபர்கள் தமிழ் ஈழப் போர்க்களத்தைப் பார்க்கவும் தமிழ்ப் போராளிகளைச் சந்திக்கவும் அவர்களுடைய போர்க்கருவிகளைப் பார்வையிடவும் தமிழ் ஈழத்துக்குச் சென்றனர்.

## 4. வள்ளுவர் வான்மறை

திருக்குறளே தமிழரின் மறை-தமிழ்மறை எனும் கொள்கை தலைதூக்கினால் மட்டுமே தமிழினம் தலை நிமிர்ந்து வாழல் முடியும் என்ற எண்ணத்தால் ஆட்கொள்ளப் பட்டு 1952இல் தமிழ்மறைக் கழகத்தை நிறுவினோம். உலகமெங்கும் வாழும் தமிழர்கள் ஒன்றுபட்டுத் திருக்குறளைச் சிறப்பாகப் போற்றச் செய்தற்குப் பலமுனைப் பணிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கழகம் ஈடுபட்டது; திருவள்ளுவர் திருநாளை ஆண்டு தோறும் ஒருநாளில் ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடச் செய்தது. திருவள்ளுவர் திருநாள் பாடலும், திருக்குறளின் ஈடிணையற்ற சிறப்புக்களை எடுத்தியம்பும் பாடல்களும் திருவள்ளுவர் திருநாள் விழாக்களிலும், திருக்குறள் மாநாடு களிலும் பாடப்படுதற்காக 1956இல் படைக்கப்பட்டன.

## 5. நூல்கள்

தொல்காப்பியம், சங்க நூல்கள், சிலப்பதிகாரம் என்பவற்றின் சிறப்புக்களை மாணவர்களும் ஏனையோரும் இனிதுணரும் பொருட்டு 1975இல் பாடப்பட்டவை.

## 6. வாழ்வு தந்தோர்

### வாழ்வு தந்த வள்ளல்

அன்பு - இன்னாசெய்யாமை-உண்மை என்பவற்றைத் தம் வாழ்வினால் விளக்கி நிலைநாட்டி இந்திய விடுதலையைப் பெற்றுக்கொடுத்து உலக மக்கள் உய்தற்குப் புதுவழி காட்டிய காந்தியடிகளை வழுத்தும் பாடல்கள். 1960இல் உருவாகியன.

### நாவலர் தாள் இறைஞ்சுதும்

ஆங்கிலேயர் ஆட்சியில் தமிழை மறந்து, சைவநெறியைக் கைவிட்டுப் பிற மதத் தலைவர்களினால் மருட்டப்பட்டுத் தம்நிலைகலங்கி நின்ற மக்களைத் தெருட்டி அஞ்சாமலும் அயராமலும் உண்மையை உணர்த்தியும், தமிழ் உரைநடையை வளர்த்தும், அரிய பல நூல்களை அச்சிட்டும் வாழ்நாள் முழுதும் அளப்பரிய பணி செய்த நாவலரைப் பாராட்டும் பாடல்கள், 1938இல் படைக்கப்பட்டவை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒருவர் உண்டோ**

தம் பாட்டுத் திறத்தால் இவ்வையத்தைப் பாலித்திட விரும்பி, மக்கள் வாழ்விலுள்ள குறைகளையும், கண்மூடிப் பழக்கவழக்கங்களையும், சாதி சமய வேற்றுமைகளையும் நீக்குதற்கு அச்சமின்றி உணர்ச்சியூட்டும் பாடல்களைப் பாடிய விடுதலைவீரர், கவிஅரசர் பாரதியாரைப் போற்றும் பாடல்கள். (1960)

**அருள்பரப்பும் அருங்கதிர்**

'யாழ் நூல்' தந்து இசை கொண்ட பேராசிரியர் விபுலானந்த அடிகளார் இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவராக 1943இல் நியமனம் பெற்ற பொழுது அவருக்கு விடுத்த பாடல்கள்.

**பார்புகழ் திறலுக்குரியார்**

சாதிசமயச் சழக்குகளாலும், இடையில் புகுந்த குருட்டாட்டங்களாலும் தமிழ் மக்கள் மெய்ப்பொருள் காணும் ஆற்றலையும், பகுத்தறிவைப் பயன்படுத்தலையும் இழந்து பண்பாட்டைச் சிதைத்து வாழ்ந்ததைக் கண்டு துடித்தெழுந்து ஒரு பெரும் சிந்தனைப் புரட்சியை உண்டாக்கி, மக்கள் மனத்தை மாற்றி, வெற்றி கண்டு புதுயுகத்தைப் படைத்த பெரியாரைப் போற்றும் பாடல்கள். (1980)

**தமிழினத்தின் தவப்புதல்வன்**

வீரமுரசு கட்டிலில் அறியாதேறித் துயின்ற மோசி கீரனாருக்கு ஊறுவிளைக்காது அவர் துயிலெழும்வரை சாமரை வீசினான் தகடூரெறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை எனும் அரசன். இதற்குக் காரணம் ''நற்றமிழ் முழுதறிதல்'' என்று அப்புலவர் பாடினார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டின் முதலமைச்சராகத் திகழ்ந்த ''நற்றமிழ் முழுதறிந்த'' பேரறிஞர் அண்ணாவின் அரும் பெரும் செயல்களை வியக்கும் பாடல். (1980)

**காக்க வந்த தெய்வம்**

இந்திய மக்களின் இதயங்களில் வீற்றிருந்து அணிசேரா நாடுகளின் அரும்பெருந் தலைவியாகவும், ஒடுக்கி அடக்கப் படும் உலக மக்களின் உரிமைக்காக அஞ்சாமலும் அயரா மலும் உழைத்த உத்தமராகவும் உலகம் போற்றும் உயர் குணங்களின் காப்பகமாகவும் விளங்கிய இந்திரா அன்னையார் 31-10-84இல் கொலை செய்யப் பட்டதை நினைந்துருகிப் பாடப்பட்டன.

**தமிழ்மலை**

பாவேந்தர் பாரதிதாசனைப்பற்றிய இப்பாடல்கள் சென்னைக்கு வந்தபின் 1984இல் பாடப்பட்டன; பாவேந்தரின் புரட்சி எழுச்சிகளையும் பாடல்களின் சிறப்பியல் புகளையும் கூறுகின்றன. பாவேந்தரின் பாடல்கள் நயம்மிக்க-வளம் செறிந்த-இனிமை நிறைந்த - செம்மை வாய்ந்த பசுந் தமிழ்ப் பாடல்களாகும்.

## 7. பேரம்பலப் புலவர்

இவர் என்னுடைய தாயாரின் தகப்பனாராவார்; சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் போன்ற பேரறிஞர்களால் பாராட்டப்பட்டவர்; வண்ணைச் சிலேடை வெண்பா முதலிய நூல்களையும், தனிப்பாடல்களையும் பாடியுள்ளார்; என திளமைப் பருவத்தில் எனக்குத் தமிழ் கற்பித்துத் தமிழ் ஆர்வத்தை ஊட்டியவர். இவர் 1935இல் பேரா இயற்கைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் பேறெய்தியபொழுது இவருடைய நினைவை நிலை நிறுத்துதற்குப் ''பேரம்பலப்புலவர் நினைவு மலர்'' எனும் மலரொன்றை வெளியிட்டேன். இந்தப் பதிகத்தையும் கையறு நிலைச் செய்யுளையும் பாடி அம்மலரிற் சேர்த்தேன்.

## 8. சீர்திருத்தம்

### நஞ்சைப் பெருக்கின் நல்லமுதாகுமா?

பகையை அன்பினாலன்றிப் பகையினால் வெல்ல முடியாது; தீமையை நன்மையினாலன்றித் தீமையினால் வெல்ல முடியாது. இந்த அடிப்படை உண்மைகளை விளக்க எழுந்தன இப்பாடல்கள். (1952)

### நீங்கள்யார்? மாபெருங் கொடுமை! தீமை விதைக்கலாமா?

இலங்கையில் தமிழ் மக்களிடையே காணப்பட்ட சாதி வேற்றுமை, தீண்டாமை முதலியவற்றை நீக்கிக் கோயில் களிலும் பொதுநிலையங்களிலும் சம உரிமைகள் மறுக்கப் பட்ட மக்களுக்கு அவ்வுரிமைகளை நல்குவதற்கும், சமுதாய வாழ்விலுள்ள குறைகளையும் அநீதிகளையும் களைதற்கும், கோயில்களில் தமிழில் வழிபாடு செய்தற்கும் 1950 ஆம் ஆண்டளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றைச் சைவசமயத்தின் சார்பில் பண்டிதர்கள் சிலரும் வைதிகக் குடுக்கைகளும் தீவிரமாக எதிர்த்தார்கள். இவர்களை விரட்டி அடித்து உண்மையை நிலைநாட்டும் இயக்கத்தின் முன்னணியில் நின்று போராடினேன். சொற் போர்கள் பல நடைபெற்றன. இவர்களுக்கு உண்மையை உணர்த்த, ''தாவாரம் இல்லை'' எனும் நூலை 1950இல் வெளியிட்டேன். கண்மூடித்தனமாக வேதாகமங்களை உதவிக்கிழுத்த வைதிகவெறியர்களுக்குத் தமிழரின் மறை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மறை - திருக்குறள்தான் என்று தெருட்டுதற்குத் தமிழ் மறைக் கழகத்தை 1952 இல் நிறுவினேன். இக்காலத்திற் பாடப்பட்டனவே இப்பாடல்கள்.

**புன்னெறி போக்கி நன்னெறி நாட்டுக**

சமுதாயத்திற் சிலர் கொழுக்கப் பலர் வாடும் கொடுமை நீங்கிச் சமதர்மம்-சமவாழ்வு நிலைகொள்ள வேண்டும் எனும் ஆர்வத்தால் பிறந்தன இப்பாடல்கள். (1954)

**தேவை எனும் பெரும் பேய்**

மக்கள் நாளுக்கு நாள் தேவைகளைப் பெருக்கிக் கொண்டு அவற்றுக்கு அடிமைப் பட்டலைந்தால் வாழ்வுக்கு இன்றியமையாத அடிப்படைத் தேவைகளைப் பலர் பெற முடியாது. எனவே, எல்லோரும் இனிது வாழ்தற்குத் தேவை யற்ற தேவைகளைக் குறைத்தல் இன்றியமையாததென்பதை வலியுறுத்துகிறது இப்பாடல். (1954)

**ஒழித்தல் வேண்டும், ஓங்கல் வேண்டும்**

மக்கட்குலம் ஒன்றுபட்டு உயர்ந்த பண்புடன் இன்புற்று அமைதியாக வாழ்தற்கு ஒழிக்கப்படவேண்டிய தீமைகளையும் ஓங்கவேண்டிய நன்மைகளையும் வகுத்தும் தொகுத்தும் உரைக்கின்றன இப்பாடல்கள். (1983)

## 9. புது உலகம்

தமிழ்மறையிலுள்ள ஈடுபாடுமட்டுமன்றிப் பதினெட் டாண்டுகள் பாராளுமன்ற உறுப்பினனாகப் பணியாற்றி மக்களின் துன்பங்கள் தொல்லைகளை நேரிலறிந்தமையும் உருசியா உட்பட உலகின் நாடுகள் பலவற்றில்[1] மக்களின்

1. சென்ற நாடுகள்; அமரிக்கா, இங்கிலாந்து, இந்தோனீசியா, உருசியா, கனடா, சிங்கப்பூர், சேர்மனி, சுவிச்சலாந்து, தைலாந்து, நோர்வே, டென்மார்க், பர்மா, பல்கேரியா, பாக்கித்தான், பிரான்சு, மலேசியா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையை நேரிற் பார்த்து அதன் திறப்பாடுகளை நன்கு உணர்ந்தமையும் இந்தியாவில் ஏழை மக்கள் படும்பாட்டைப் பார்த்தமையால் உள்ளத்திலுண்டான உறுத்தல்களும் உலக நிகழ்வுகளும் இப்புது உலகத்தைப் படைக்கச் செய்தன.

''புதுஉலகம்'' ஒரு புதுமைப் படைப்பு; சமவாய்ப்புச் சமவாழ்வுச் சமுதாயத்தைப் பேருழைப்பினாலும் நல்லாட்சியினாலுமே உருவாக்கலாம் என்பதை விளக்குகிறது. உணவு, உடை, உறையுள் எனும் மூன்று உகரங்களும் யாவர்க்கும் போதிய அளவு கிடைக்க வேண்டும்; இலகுவிற்கிடைக்க வேண்டும். உழைப்பு, உறுதி, உண்மை எனும் இரண்டாவது வகை உகரங்கள் எல்லா மக்களுக்கும் இன்றியமையாதன. கடமை, கண்ணியம் கட்டுப்பாடு எனும் மூன்று ககரங்களும் மக்களை நன்மக்களாக ஆக்குவன.

இந்த இருவகை உகரங்களும், ககரங்களும் சமுதாயத்தில் நிலை கொண்டால் அன்பு, அருள், அறம் எனும் மூன்று அகரங்களும் மலர்ந்து நிலைத்து நிற்கும்; நல்ல சமுதாயம்—இன்பந்தவழும் சமுதாயம்—சமவாழ்வுச் சமுதாயம் உருவாகும்.

நாட்டுக்கு நல்லரசும், உலக அரசும் உடனே உருவாக வேண்டும் என்பதையும் ''புது உலகம்'' வற்புறுத்துகின்றது.

## 10. வெற்றி! வெற்றி!!

இப்பாடல்கள் தமிழ் ஈழம் ஐம்பது எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டவை, வீரத்தமிழ் இளைஞர்கள் ஆயுதம் எடுத்துப் போராடிய பொழுது யான் சொல்லெடுத்துத் தாக்கினேன். 1985இல் தமிழ் ஈழம் ஐம்பது எனும் நூல் உருவாகிற்று. ''ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்து விட்டோம் என்று'' பாரதியார் சுதந்திரம் அடை தற்கு முன்பாடினார். தமிழர்கள் ''தமிழ் ஈழம் முழுதும் பெற்றே ஆள்கின்றார்'' என்று யான் 1985இல் பாடினேன். தமிழ் ஈழத்தில் தனி ஆட்சிதோன்றும். இதற்குச் சிங்கள அரசுடன் சிங்களத் தீவிரவாதிகளும் இப்பொழுது ஆக்கமும் ஊக்கமும் நல்கத் தொடங்கி விட்டனர்.

## 11. பல்வகை

### தமிழ்ப் பொழில்

தமிழவேள் உமாமகேசுவரம்பிள்ளை அவர்கள் தலைமையில் கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழ்ப் பொழில் எனும் செந்தமிழ் ஏட்டை வெளியிட்டுச் சிறந்த தமிழ்ப்பணி ஆற்றியது. இப்பணியை வியந்து தமிழ்ப் பொழிலை வாழ்த்திப் பாடிய பாடல் இது. தமிழ்ப்பொழிலின் 1934ஆம் ஆண்டுச் சித்திரைத் திங்கள் மலரில் வெளியிடப் பட்டது.

### குறிஞ்சி ஏடு

1962இல் குறிஞ்சி ஏடு வெளியிடப்பட்ட பொழுது வாழ்த்திய பாடல்.

### காரைக்குடி திருவள்ளுவர் கழகம்

இக்கழகத்தினர் எடுத்த தமிழ் விழாவுக்கு 9-7-62 இல் அனுப்பிய பாடல்கள்.

### மறைமலை அடிகளார் கலைமன்றம்

இந்தக் கலை மன்றத்தின் திறப்பு விழாவின் போது வாழ்த்திப் பாடியது. (1962)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சேலம் குகை திருக்குறள் கழகம்**

இக்கழகத்தினர் நடத்திய திருக்குறள் விழாவினை வாழ்த்திய பாடல்கள். (1962)

**கொழும்பு தமிழ்ச் சங்கம் - கம்பர் விழா**

இச்சங்கக் கம்பர் விழாவில் உரைநிகழ்த்தப் பேரரசிரியர் ரா.-பி. சேதுப்பிள்ளை அவர்களுடன் பேராசிரியர் சீனிவாசராகவனும் கொழும்புக்கு வந்த பொழுது வரவேற்ற பாடல்.

**மயிலை சீனி வேங்கடசாமிக்கு**

இப்பெரியார் ''பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்'' எனும் தமது நூலை அனுப்பினார். அவருக்கு நன்றி நவில்கிறது இப்பாடல். (1962).

**சாலை இளந்திரையனுக்கும் வாழ்க்கைத் துணைவியாருக்கும்**

வேலணையில் ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத் திரண்டில் நடைபெற்ற தமிழ்மறைக் கழகத்தின் பத்தாவது திருக்குறள் மாநாட்டில் தம்முடைய வாழ்க்கைத் துணைவி யார் டாக்டர் சாலினி இளந்திரையனுடன் பங்கு கொண்டு உரைவிருந்தும் கவிதை விருந்தும் அளித்த பேராசிரியர் டாக்டர் சாலை இளந்திரையனுக்கு நன்றி நவின்ற பாடல்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

...வ நூலகப் பிரிவு
...சன நூலக சேவை
யாழ்ப்பாணம்

## டாக்டர் கா. பொ. இரத்தினம் எழுதிய நூல்கள்

1. அடிமைச் சாசனம்
2. இருபத்து நான்கு மணி நேரத்தில் தமிழ் ஈழம்
3. இலக்கியங் கற்பித்தல்
4. இலங்கையில் இன்பத் தமிழ்
5. உரை வண்ணம்
6. கற்பக மலர்
7. தடுப்புக் காவலில் பத்து நாள்கள்
8. தமிழ் உணர்ச்சி
9. தமிழ்மறை விருந்து
10. தனி ஆட்சி
11. தாவாரம் இல்லை
12. நூற்றாண்டுகளில் தமிழ்
13. பச்சை மண்ணும் சுட்டமண்ணும்
14. மனப்பால்
15. யாஅம் இரப்பவை

156838

### கவிதை நூல்கள்

★ அன்புச்சோலை ★ இமயத்து உச்சியில் ★ தமிழ் ஈழம் ஐம்பது


### தொகுத்தும் எழுதிச் சேர்த்தும் பதித்த நூல்கள்

1. எழுத்தாளர் கல்கி
2. தமிழ்மறைக் கட்டுரைகள்
3. திருவள்ளுவர் திருநாள் மலர்
4. நாவலர் நினைவு மலர்
5. பேரம்பலப் புலவர் நினைவு மலர்
6. முருகு

713 2CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பேராசிரியர், டாக்டர் கா. பொ. இரத்தினம்** யாழ்ப்பாண மாவட்டத்தில், வேலணை எனுமூரில் பிறந்தவர். இலண்டன் பல்கலைக் கழகத்தின் பி. ஏ. (ஆனர்சு) சென்னைப் பல்கலைக் கழகத்தின் எம் ஏ., பி ஓ.எல். பட்டங்களுடன், 'வித்துவான்,' 'பண்டிதர்' பட்டங்களையும் பெற்றவர். உலகப்பல்கலைக் கழகம் (வ. அ.) இவருக்கு **'டாக்டர்'** பட்டத்தை வழங்கிப் பெருமைப்படுத்தியுள்ளது. தமிழகப் புலவர் குழு **'தமிழ்ச் சான்றோர்'** எனும் பட்டத்தை நல்கிச் சிறப்புச் செய்தது. **'செந்தமிழ்க் கலைமணி, திருக்குறள் செல்வர்'** எனும் பட்டங்களையும் பெற்றவர்.

கொழும்பு அரசினர் ஆசிரியர் கல்லூரியில் 12 ஆண்டுகள் **தமிழ்ப் பேராசிரியராகப்** பணியாற்றியவர். இலங்கை அரச கரும மொழித் திணைக்களத்தில் **தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராக** ஆறாண்டுகளுக்கு மேல் பணியாற்றிப் பதினையாயிரத்துக்கு மேற்பட்ட **ஆட்சிச் சொற்களை** வெளியிடுதற்குப் பொறுப்பாயிருந்தவர். மலாயாப் பல்கலைக் கழகத்தில் இந்தியத்துறை **விரிவுரையாளராகவும்** பணியாற்றியவர்.

1965 ஆம் ஆண்டு தொடக்கம் **இலங்கைப் பாராளுமன்றத்தில்** உறுப்பினராகப் **18 ஆண்டுகள்** தொடர்ந்திருந்து தமிழ்மொழி உரிமைக்கும், தமிழின விடுதலைக்கும், தமிழ் ஈழத்துக்கும் அஞ்சாமலும் அசையாமலும் அயராமலும் போராடினவர். திருக்குறள் **தமிழரின் மறை-தமிழ்மறை** என்பதை நிலைநாட்டுதற்கு 1952 இல் **தமிழ் மறைக் கழகத்தை** நிறுவி, அதன் ஆயுள் தலைவராக இருந்து பல துறைகளிற் பகர்வரும் பணிகள் செய்து வருகிறார். உலகமெங்குமுள்ள தமிழர்களுடன் தொடர்புகொண்டு **உலகத் தமிழ் மன்றத்தை** 1963இல் கோலாலம்பூரில் நிறுவிப பதிவு செய்து அதன் தலைவராகப் பல ஆண்டுகள் பணிசெய்தவர்.

பல நாடுகளுக்குச் சென்று தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாற்றியவர். பல நாடுகளின் ஏடுகளிலும் சிறப்பு மலர்களிலும் இவருடைய கட்டுரைகளும் கவிதைகளும் வெளிவந்துள்ளன. உரைநடை நூல்கள் **பதினைந்துக்கும்**, கவிதை நூல்கள் **மூன்றுக்கும்** ஆசிரியர். **ஆறு நூல்களைத்** தொகுத்தும் எழுதிச் சேர்த்தும் பதிப்பித்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org